உ

ஓம்.

# ஹிந்துமத தூஷணையின் பரிகாரம்.

## (IN DEFENCE OF HINDUISM.)

இஃது

அந்நிபிஸண்டு அம்மையார்

ஆங்கிலத்தில் எழுதியுள்ளது.

தமிழில் மொழிபெயர்க்கப் பெற்றது.

———:o:———

சிறு விளக்கெனினும்
கரு இருளை அகற்றிவிடும்—பழமொழி.

முதற்பதிப்பு—1000 பிரதிகள்.

ப. நாராயணன்.

மதுரை
விக்டோரியா அச்சு ஆபீஸில்
பதிப்பிக்கப் பெற்றது.

இதன்விலை அணா 4.

1909

:9941

# முகவுரை.

---:o:---

இச்சிறு புஸ்தகம், நம்மதத்திலும், நந்தேசத்திலும் அதிக அன்பும் அபிமானமுமுள்ள மாது ஸ்ரீ அந்நிபிஸண்டு அம்மையாரால், ஆங்கிலபாஷையில் எழுதப்பட்டுள்ளது. ஆங்கில பாஷையைத் தெரியாதவர்களின் பிரயோஜனத்திற்காக, அந்த அம்மையாரின், விருப்பத்தின்படித் தமிழில் மொழிபெயர்த்துள்ளேன். சிறு புஸ்தகமாக இருப்பினும், சில அருமையான உண்மைகள் இதின்கண் வெளியிடப் பெற்றிருக்கின்றன. இஃது ஆண் பெண் யாவரும் வாசிக்கற்பாலது.

மதுரை பிரஹ்மஞான
மந்திரம்,
1909ஞு ஜுலை மீ 10௳.

ப. நாராயணன்.

# ஹிந்து மத தூஷணையின் பரிகாரம்.

## I-ம் அதிகாரம்.

———:O:———

### *விக்கிரக ஆராதனை.

உலகத்தில், எக்காலத்திலும், நாகரீகமில்லாத கீழான ஜாதியார் முதற்கொண்டு உயர்வான நாகரீகமடைந்த மேலான ஜாதியார் வரையுள்ள எல்லா ஜாதியாருள்ளும், மத சம்பந்தமான ஆராதனையில், விக்கிரகங்கள் உபயோகப்பட்டு வந்திருக்கின்றன; உயர்வான நாகரீகமடைந்தவர்களுக்குள் தியானத்திற்கு சாதனமாக, உபயோகப்பட்டு வந்திருக்கின்றன. ஆனால், சில இடங்களில், சில காரணங்களினால், விக்கிரகங்களின் உபயோகத்தை, சிறுபான்மையான ஜனங்கள் தவிர்த்துவிட்டார்கள். அப்படித்தவிர்த்ததும், வெளிப்படையாகமாத்திரமே அன்றி உண்மையில் இல்லை. உதாரணமாக, சுமார் 350 வருஷங்களாக, கிறீஸ்துவர்களில் சிறுபான்மையார்—அவர்களுக்கு பிராடஸ்டண்டுகேள் என்று

[*Note.— இதன் தத்துவங்களை, விருதை சிவஞான யோகிகள் இயற்றிய தேவோபாசனதீயம் என்ற நூலில் கண்டுகொள்க].

பெயர்—விக்கிரகங்களின் உபயோகத்தை விலக்கிவிட்டார்கள். இதற்குக்காரணம்—விக்கிரகங்களின் ஆராதனையானது விபரீதமாகவும், புத்தி ஹீனமாகவும், நடைபெற்றதினால் அவைகளை முற்றும் துறக்கும்படியாக நேர்ந்தது. ஆனால் இது சொற்பகாலம்தான் நிற்பதாகும். இக்காரணம்பற்றியே, யூதர்கள் (Jews) தங்களைச் சுற்றியுள்ள ஜாதியார்கள் அறிவின்மையால், உண்மை தெரியாமல், விக்கிரக ஆராதனை செய்துவந்தமையால், விக்கிரகங்களைத் தள்ளிவிட்டார்கள்! மகம்மதியர்களுக்கு, விக்கிரகங்களின் உபயோகம் கூடாதென்றே, அவர்கள் மதசாஸ்திரத்தில் உபதேசம் ஏற்பட்டுள்ளது. அதற்குக்காரணம், அம்மத ஸ்தாபகராகிய மகமத் நபி அவர்கள இருந்த தேசத்திலும் காலத்திலும், விக்கிரக ஆராதனை விபரீதமாக நடைபெற்றது. பிந்தியகாலங்களில், இந்தியாவிலும், விக்கிரக ஆராதனையின் விபரீத அனுஷ்டானத்தினால், ஹிந்துக்களின் சில உட்பிரிவு ஜாதியார்கள்—உதாரணமாக சீக்கர்கள், ஆரிய சமாஜத்தர்கள், பிரஹ்ம சமாஜத்தர்கள்—விக்கிரகங்களின் உபயோகத்தைத் தள்ளிவிட்டார்கள்.

2. இவ்விதமாக ஒருவித விக்கிரகங்களின் உபயோகத்தை தவிர்த்துவிட்டாலும், மற்றொருவிதமாக அவைகளின் உபயோகம், தவிர்க்கமுடியாமல், திரும்பவும் அனுஷ்

டானத்தில் வருகின்றதை நாம் பார்ப்போம். இஃது இயல்பே. யூதர்கள் பேழை (Ark) யை ஆராதித்துவந்தார்கள், மகமதியர்கள் கபா (Kaapa) வை ஆராதித்து வருகிறார்கள். சீக்கர்கள் கிரந்தத்தை (Granth) ஆராதிக்கிறார்கள். மற்றவர்கள், ஸ்தூலபுலனுக்குப் புலப்படும் ஸ்தூலவிக்கிரகத்தைத் தள்ளிவிட்டாலும், மனத்தில் ஒரு உருவத்தை சங்கற்பித்துக்கொண்டு அதை ஆராதிக்கிறார்கள். இதைப் பற்றி பின்பு தெரிவிப்போம்.

3. இவ்விதமான வழக்கம் என்றும் உள்ளதாகவும், எங்கும் உள்ளதாகவும் இருக்கின்றமையால், இதற்கு, இயற்கையாகவே, உண்மையான மூலஆதாரம் இருக்கவேண்டுமென்று தோன்றுகின்றது. அதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். அதன் உண்மையைத்தெரிந்து, அதன்மேல் உண்டாயிருக்கும் விபரீத ஆசாரங்களை விலக்கி, அதை சுத்தப்படுத்திக்கொள்ளவேண்டும். அதைதள்ளிப்போடக்கூடாது. உண்மையில், அதை தவிர்க்க முடியாது. அதன் ஒரு ஸ்வரூபத்தைத் தள்ளிவிட்டோமானால், அதன் வேறு ஒரு ஸ்வரூபத்தைக்கைக்கொள்ளுவோம்.

4. விக்கிரக ஆராதனையின் மூலதத்துவமென்ன வென்றால், வரம்புக்குட்பட்ட மனதானது, வரம்புகடந்த அகண்டமான பிரஹ்மத்தை, கிரகித்தல் கூடாதது என்பதாம்.

அதை—“ இதுவன்று இதுவன்று ”— (நேதி நேதி) என்று, எதிர்மறையால் மாத்திரம் விவரிக்க முடியும். நிற்குண பிரஹ்மம் நினைப்புக்கு எட்டாதது. அதனால், அன்பு செய்யத்தக்கதன்று; உபாசிக்கத் தக்கதன்று. சகுண பிரஹ்மம்தான்—அதாவது ஈசுவரன்—நினைக்கப் பாலர்! அன்புக்குரியர்! உபாசிக்கப்படத்தக்கவர். அவருடைய குணங்களால், அவனை அணுகுவோம், அவனை ஸ்பரிசிப்போம், அவனை உணருவோம். உயர்நலம் அமைந்த மனோபாவங்கள் அவனைநோக்கி எழும், நம்முடைய ஹிரதயங்கள் அவர் பாதத்தில் படியும். விக்கிரகம்—என்றால், ஈசுவரன், அல்லது, அவர் அம்சம்பொருந்திய மஹாபுருஷனின், குணங்களில்—சிலவற்றைக் குறிப்பிடுமாறு ஏற்பட்ட பிரதீகம். உதாரணமாக, விஷ்ணுவின் விக்கிரகத்தைத் பார்ப்போம். அது நீலவர்ணம்—ஆகாசத்தின்வர்ணம் நீலம் எங்கும்வியாபிஎன்பதின் அறி குறி; நாலு கைகள் உடையது—நாலுதிக்குகளைக்குறிப்பிக்கிறது; சிஷ்டிக்கும்நாதத்தின் அறிகுறியாக, சங்கம் உடையது; ராஜ்ஜியபாரத்தை வகிக்கின்றதைக்காட்ட, அதிகார முத்திரைக்கோலை உடையது; சக்தியைக்காட்டச் சக்கிரமும், பிரகிருதி புருஷத்தன்மை அமைந்திருக்கிறதைக்காட்ட தாமரைப்புஷ்பமும்; இவை போன்றமற்றவைகளை இவ்விக்கிரகத்தில் காண்கிறோம். இவ்வறிகுறி ரூபங்கள், மேலான சூக்ஷ்மலோகங்களில், ஞானி

களின் திவ்விய திருஷ்டிக்குப்புலப்படும். அந்த லோகங்களில் தாங்கள் பார்த்த, திவ்விய குணங்களையும் சக்திகளையும், ஜனங்கள் மனத்தில் எளிதில் ஞாபகப்படுத்துமாறு, இங்கேபூமியல் ஞானிகள் உருவகப்படுத்துகிறார்கள்.

5. அல்லது, அவ்விக்கிரகம், ஸ்ரீராம ஸ்ரீகிருஷ்ண அவதாரபுருஷர்களையும், கணபதி, துர்க்கை, லக்ஷ்மி முதலிய மூர்த்திகளையும், பற்றியதாகயிருக்கும். ஒவ்வொரு சமயத்திலும் குறிப்பிட்ட விக்கிரக உருவம், ஈசுவரனின் ஓர் ஓர் மூர்த்தியாக உபாசிக்கப்படுகிறது. நம்முடைய மனதானது பற்றும்படியாக, ஈஸ்வரன் மஹிமைதங்கிய மனித ரூபமாக, உபாசிக்கப்படுகிறார்.

6. விக்கிரக ஆராதனை விஷயத்தில், இன்னும் ஒரு உண்மைஉண்டு. ஈசுவரன் ஒரே பிராணன், எங்கும் பரவியவர், எங்குமுள்ளவர். அதனால் எவ்வஸ்துவிலும் அந்தர்யாமியாக இருக்கின்றார் என உபாசிக்கக்கூடியவர். ஒரு மரம், ஒரு கல், கடவுளின் பிரதீகமாக ஏற்படப்பாலது. மரத்தை, மரமாகவும், கல்லைக் கல்லாகவும் மனிதன் உபாசிக்கும்பக்ஷத்தில், அது சரியன்று, அஃது அறிவின்மையாம். மரத்திலும், கல்லிலும், கடவுள் உளர் என்று ஒருவன் உபாசிப்பானாகில், அவன் அறிவுள்ளவன். அவன் உபாசனை நேர்மையானதே. அந்தர்யாமியாக இருக்கும்

ஓர் பேர்உயிர் என்று உபாசியாமல் வெளி உருவத்தை மாத்திரம் உபாசித்தல் விக்கிரக ஆராதனையின் சரியான ஆசாரமன்று. அது தப்பானது. இறைவன் ஒவ்வொரு வஸ்துவிலும் இருக்கிறதாக உபாசித்து அவரிடம் அன்புபாராட்டல் விக்கிரக ஆராதனையின் சரியான ஆசாரம்.

7. கடவுளை உபாசனை செய்யும்போதும், தியானிக்கும்போதும், மனத்தில், ஒரு ஸ்வரூபத்தை கற்பித்துத்தான், சிந்திக்கக்கூடும். சிருஷ்டிகருத்தர் என்றும், இறைவன் என்றும், பிதா என்றும், காவலன் என்றும், சத்தியம் என்றும், சக்தி என்றும், அன்பு என்றும் அவரை இவ்விதமாக நாம் சிந்திக்கிறோம். இச்சிந்தனையில், அவருக்கு ஒரு ரூபம், மூர்த்தி, அதாவது விக்கிரகத்தை, மனத்தில்கற்பிக்கிறோம். யாதானும் ஒருவித ரூபமின்றி, நாம் ஈஸ்வர ஆராதனையும், அவரைப்பற்றிய நினைப்பும், செய்யமுடியாது. அப்படி நினைக்கிறதில், அவருடைய திவ்விய சுபாவத்தில் யாதேனும் ஏகதேச ஒரு அம்சத்தைமாத்திரம் மனத்தில் சிந்திக்கக்கூடுமே, அல்லாமல், அதிகமாக முடியாதென்று யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம். ஆனால், இவ்வித மனச்சங்கற்பத்தினால் உண்டுபண்ணப்படும் விக்கிரகங்கள், ஸதூலமான விக்கிரகங்களைவிட, அதிக விபரீதமான எண்ணங்களுக்குக் காரணமாகும். ஏனென்றால், ஸ்தூலமான

விக்கிரகத்தை, உள்ளபடி உண்மையான ஈசுவரனென்று ஒருவனும் நினையான். அத்தப்பான அபிப்பிராயம் கொள்ளான். ஆனால் மனத்தினால் ஈசுவரனை, சங்கற்பித்து, ஒரு மூர்த்தி ரூபத்தை சிந்திக்கின்றவர்களில் அனேகர், தம்மால் சிந்திக்கப்பெறும் மூர்த்திஸ்வரூபமே, உண்மையில், ஈசுவரன் என மதிமயங்கி நினைக்கிறார்கள்.

8. ஒரு சிறு கதை; அது உண்மையாய் நேர்ந்தது. ஒரு கோவிலில், ஓர் இடத்தில் ஒரு யோகி பூஜை செய்துகொண்டிருந்தார். ஒரு கிறிஸ்து பாதிரி அவரைக்கண்டு, நீர் என்ன செய்கிறீர் என்றார். யோகி, நான் ஈசுவர பூஜை செய்கிறேன், என்றார். பாதிரி, நீர் என்னுடைய ஈசுவரனை பூஜை செய்யவேண்டுமென்றார். யோகி, அப்படியானால், ஈசுவரன் இரண்டுபெயர்கள் உளரே, என்றுகேட்டார். பாதிரி வெட்கப்பட்டுத் திரும்பிச்சென்றார்.

9. தியானகாலத்தில், மனது நிற்கிறதற்கு, விக்கிரகம், ஒரு லக்ஷியமாக ஏற்படுகிறது. சொற்ப நிமிஷம் விக்கிரகத்தை கண் உற்றுப்பார்க்கவேண்டும்; பின்பு கண்களை மூடவேண்டும்; பார்த்த ரூபத்தை மனத்தில் சிந்திக்கவேண்டும்; அந்த சிந்தனை பிம்பத்தில், கவனம் வைக்கவேண்டும். மனது நிலைநிற்கப் பழகப்பழக, ரூபம் மறையும். அதன்கண் அந்தர்யாமியாக இருக்கின்ற ஈசுவரத்தன்மை பிரஞ்

ஞையில் சம்பந்தித்து உட்புகும். அதனுல் மன எழுச்சி யும், ஆனந்தமும், ஜனிக்கும்.

10. மேலும், ஒரு விக்கிரகமானது, காந்தசக்திபோன்று, அதைச்சமீபிக்கிறவருக்கு, ஒரு சக்தி அல்லது வீரிய விசேஷத்தை உண்டுபண்ணுவதாகும். அறிவில் அதிக விகாசம்பெற்றவர், அந்த விக்கிரகம் எம்மூர்த்தியின் பிரிதீகமோ, அம்மூர்த்தியின் அருள் பிரசாதம் இறங்கும்படி, செய்யக்கூடும். ஆராதனைக்கும், தியானத்திற்கும், அத்தன்மையான விக்கிரகம் அநுகூலமாகவிருக்கும். சுத்தமானவும் சாந்தகரமானவுமான அந்த அருள்சக்திப்பிரசாதம் நாலு பக்கத்திலும் பரவி, மனச்சாந்தத்தையும், மனச் சந்துஷ்டியையும், இலகுவாய் உண்டுபண்ணும்; அதனுல் மனதானது சமாதனம்பெறும். மேலும், அத்தன்மையான யோக்கியதையுடன் லக்ஷியஸ்தானம் ஏற்படும்பக்ஷத்தில், ஏற்கனவேஉள்ள அம்மூர்த்தியின்சக்தி, விசேஷமாகஸ்திரப்படும்; அதிகரிக்கும்; பக்தனின் ஸ்தோத்திரமும் தியானமும் அந்த மூர்த்தியை எட்டவே, முன்பு உள்ள லக்ஷியத்தின் மூலமாக, பிரார்த்தனைகள் நிறைவேறும்; அதுதான் அருள் பிரசாதம் சித்தித்தல்.

11. ஐரோப்பியர்கள் தெரிந்திருக்கிற முறைப்படி, காந்தசக்தியின் உண்மையை ஆராய்ந்து அறிந்தவர்கள்,

விக்கிரகத்தின் இத்தன்மையான உபயோகத்தை நன்கு உணருவார்கள். கீழ்நாட்டிலுள்ள ஞானிகள், விக்கிரக ஆராதனையை ஏற்படுத்தியதின் புத்திநுட்பத்தையும், சாஸ்திர பிரஞ்ஞையையும் கண்டு மெச்சுவார்கள்.

12. ஜீவன், ஞானமுறையில் மேல்நோக்கிச்செல்லும் நெறியில், இருக்கின்ற சாதகங்களை உதரித்தள்ளுதல் மௌட்டியமாகவும் அறிவின்மையாகவும் முடியும். ஈசுவரனை எல்லாரும் ஒரேமாதிரியாக வழிபடவேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்தல் அக்கிரமமாகவும் மூடத்தன்மைபற்றியதாகவும் இருக்கும். பக்திமார்க்கத்தை எல்லாரும் எளிதில் அனுஷ்டிக்க இயலும். இம்மார்க்கத்தின் சிலபடிகளில், விக்கிரகங்களின் சாதகம் அவசியமாகும்.

## 2-ம் அதிகாரம்.

## தேவர்களின் பூஜை.

“ ஹிந்துமதத்தில் பல தேவர்களின் பூஜையுள்ளது. அதனால் அத்தன்மையான சமயம் கீழானபடியிலுள்ளது ” என்று மூடர்கள் ஹிந்து மதத்தை அடிக்கடி தூஷிப்பார்

கள். லோகாயதமதம் நீங்கலாக, மற்றுமுள்ள எல்லா சமயங்களிலும், பலதேவர்களின் ஆராதனை உண்டு என்பதை அவர்கள் அறிந்தார்களில்லை. ஒரே வஸ்து உளது, ஒரே பிராணன் உளது; அதினின்றும் எல்லாம் எல்லாஜீவராசிகளும் உண்டாகின்றன; அதினால் நடைபெறுகின்றன. அஃது ஒன்றே சுயமாகஉள்ளது, மற்றவைகளெல்லாம் அதினின்று வருகின்றன. அதுவே என்றும் உள்ள அழிவில்லாத மாறுதலில்லாத பிரஹ்மன். மனித சிருஷ்டியைப் போலவே தேவர்களின் சிருஷ்டியும், மதசாஸ்திரங்களில் சொல்லப் பட்டிருக்கிறது. அந்த ஒரு வஸ்துவினின்று பிரஹ்மா உண்டானார். அந்த பிரஹ்மாவினின்று, தேவர்கள் உண்டானார்கள். மனிதர்களைப்போலவே, தேவர்களின் சிருஷ்டியும் வாஸ்தவமானவிஷயம். தேவர்களின் சிருஷ்டி உளது, என்றதினால்மூலவஸ்து ஒன்று என்பது இல்லாமற் போகாது.

2. ஜகத்தில், உயர்வற உயர்நலம் அமைந்து வியக்தப்படும் மூர்த்தி—சகுண பிரஹ்மன்—அதாவது—ஈசுவரன். அவர் சர்வலோக நாதன்; அந்த ஜகத்தின் ஈசுவரன் மூன்று அவசியமான கிருத்தியங்களுக்காக, மூன்று பாவங்களைப் பெறுகிறார்; (1) சிருஷ்டிப்பு, (2) ரக்ஷிப்பு (3) சம்ஹாரம் என்ற இம்மூன்று கிருத்தியங்களை நடத்த, மூன்று மூர்த்திகளாக ஈசுவரன் வியக்தமாகிறார். சிருஷ்டிகிருத்திய அம்

சத்தினின்று, தேவர்கள் தோன்றுகிறார்கள். இவர்கள் அவர்களுடைய வேலைக்காரர்களாக இருந்துகொண்டு உலகத்தில், ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களை நடத்திவருகின்றார்கள். இவர்கள் பலதிறத்தார்களாக இருக்கின்றார்கள், எண்ணிறந்தவர்கள்; பிரபஞ்சம் ஒழுங்காகவும் நேர்மையாகவும் நடைபெறும்படியாக, முச்கியமாக ஏழுவித தேவவர்க்கங்களாக இருக்கின்றார்கள். ஒவ்வொருவர்க்கமும் அததன் முக்கியஸ்தரான அதிபதியின் ஆளுகைக்குள் இருக்கின்றது. அவ்வேழு வர்க்கங்களில், ஐந்துவர்க்கங்களின் தலைமைக்காரர்கள் மாத்திரம், இதுவரை வியக்தமாகி இருக்கின்றார்கள்; இவர்கள், இந்திரன், வாயு, அக்கினி, வருணன், குபேரன் என்பவர்களாம். இவர்கள் அதிகார புருஷர்கள். இப்பெயர்கள் அவர்களின்தொழிலைக் குறிப்பிடுகின்றன. தேவேந்திரப்பதவியைப் பெறுகின்றவர் அப்பெயரையும் பெறுகிறார்; துயர்ச்சியாக அந்தப் பதவியைப் பெறுகின்றவர்கள், ஆகாசம் அல்லது சுவர்க்கலோக அதிபதியாகிய, இந்திரன் என்றுஅழைக்கப்படுகிறார்கள். (மஹாதேவருக்கு முன்னர் ஐந்து இந்திரர்கள் ஒரேசமயத்தில் தோன்றினர்களென்றும், அவர்களில் ஒருவர் அப்போது ஆண்டுகொண்டிருந்த இந்ரன் என்று ³, மற்ற நால்வர் முன் ஆண்டவர்கள் என்றும், மஹா பாரதத்தில் படித்திருக்கிறோம்). மேற்கண்ட முக்

கிய தேவர்களுக்கு உள்பட்டவர்களாய் தேவகோஷ்டிகள் இருக்கின்றார்கள். இவர்கள் பிரபஞ்ச சம்பந்தமான நானாவிதமான கைங்கரியங்களை நடத்துகின்றார்கள். இவர்கள் படிப்படியான பெருங்கூட்டத்தார்கள். திவ்வியமாக ஜ்வலித்துக் கொண்டிருக்கின்ற விஞ்ஞான முள்ளவர்கள்; ஆகாசமண்டலத்தில், பளிச்சு பளிச்சு என்று, தங்கு தடையின்றி தோன்றும் இயல்பினர்; ஈசுவரனின் ஆஞ்ஞையாகிய, பிரபஞ்சதர்மங்களையும், விதிகளையும், இவர்கள் கொண்டுசெலுத்திவருகின்றார்கள். இவர்களுக்குக்கீழாகச்சிறு தேவர்கள் உள்ளார். அவர்கள் ஒவ்வோர் அண்டத்தின் காரியாதிகளை நடத்துவார்கள். இச்சிறு தேவர்களுக்குக் கீழாக அவர்களைவிடச்சிறியவர்கள் உண்டு; அவர்கள் ஒவ்வோர்தேசம், ஒவ்வோர்நாடு, இவைகளின்காரியாதிகளை நடத்துவார்கள். இந்தப்பிரபஞ்சம் அல்லது இந்த ஜகத்தானது, யுக்திக்கும் நியாயத்துக்கும் விரோதமான பயித்தியமான அமைப்பு அன்று; தாதுவர்க்கங்கள், ஸ்தாவரங்கள், ஜங்கமங்கள், மனிதர்கள், என்று படிப்படியான சிருஷ்டிகள் ஒருபுரமாகவும், எல்லா வல்லமை பொருந்திய ஈசுவரன் மற்றொருபுரமாகவும், இவ்விரண்டுக்கும் எவ்வித சம்மந்தமும் இன்றி இடையில் சூன்னியமான பெரும்பாழ் இருப்பதாக அறிவுள்ளார்நினைக்கார். இவ்விதமாக இருப்பதன்று, ஆனால், இப்பிரபஞ்சம் ஒழுங்காக முறைப்படுத்தப்

பட்டதாகவும், ஈசுவரன் முதல் புழு ஈருக, எல்லா ஜீவராசிகளும் இடையருத சப்பந்தமுள்ள சங்கிலிகோவைபோன்றவையுமாம். இக்கொள்கை எல்லாமதத்திலும் உள்ளது. ஈசுவரனுக்கும் மனிதனுக்கும் மத்தியில், விசாலமாகப் பரவியிருக்கின்ற தேவகோஷ்டிகளுக்கு, எல்லாமதங்களிலும், ஒரேவிதமான தொழில்கள் ஏற்பட்டுள்ளன; ஆனல் அவர்களுக்குப்பெயர்கள்மாத்திரம்வித்தியாசப்படுகின்றன. பௌத்தர்கள், ஹிந்துக்களைப்போலவே, இவர்களை, தேவர்கள் என்கிறர்கள். ஜோராஸ்தர்மதத்தினர், இவர்களை பேரிஷ்டாக்கள் என்கிறர்கள்; கிறீஸ்துவர்களும் மகம்மதியர்களும் இவர்களை, ஆர்கேஞ்சல்ஸ் (Archangels) ஏஞ்சல்ஸ் (Angels) என்கிறர்கள். பெயர்கள் வித்தியாஸத்தினல் யாதொரு பாதகமும் இல்லை. கிறீஸ்து பிராடஸ்டண்டு கிரந்தகர்த்தாவான ஜான் பனியன் என்பார் இவர்களை, திவ்விய தேஜஸ்விக்கள் (அதாவது ஹிந்துக்களால் அழைக்கப்படும் தேவர்கள்) என்றபெயரால் பிரஸ்தாபிக்கின்றர். அநேகமாக, அவர், இவர்களை, ஞானக்கண்ணல் நேரில் பார்த்திருப்பார்; அதனல், இவர்களுக்குப்பொருத்தமானவும், இவர்களின் தோற்றத்தை சரியானபடி துலக்குகிறதுமானபெயரை, இவர்களுக்கு இட்டிருக்கிறர்.

3. ஆகவே, இப்போது ஒருகேள்வி பிறக்கிறது. மனிதர்கள் தேவர்களை ஆராதனைபண்ணுதல் சரியா? கூடுமா?

ஏன்கூடாது? இப்போது, திருமூர்த்திகளின் ஆராதனையைப் பற்றிப்பேசாமல் நிருத்துவோம்; பிரபஞ்சசம்பந்தமான தேவகோஷ்டிகளைப்பற்றியும், முக்கியமாக, மனிதவிகாச முறையில் சம்பந்தமான தேவர்களைப்பற்றியும், இக்கேள்வியை விசாரிப்போம். தன்னுடையபயிரை காப்பாற்றுவதில் அக்கரையான ஒரு குடியானவன், மழையையும் வெய்யிலையும் சரியானபடி நிகழும்படிசெய்யும் தேவர்களை ஆராதனைசெய்தலும், அவர்கள் அனுக்கிரம்வேண்டி அவர்களை பிரார்த்தித்தலும், நியாயமே. தன்னைவிட அறிவுள்ளாரிடம் புத்திமதிகேட்டலும், உதவி விரும்புதலும், குற்றமன்றே. அப்படியானால் பிரம்மாமுதல் ஸ்தம்பம் பரியந்தம் உள்ள பலபடிகளானவும், பலவாறுகவும், விருத்தியடைகின்றவும், விகாசமாகிக்கொண்டு வருகிறவுமான, ஜீவப்பிராணிகளின் உதவியைநாடுதல் ஏன் குற்றமாமோ? நமக்கு கீழ்ஜீவராசிகள் எவ்வளவோ, அதைவிட ஏராளமானவையாக இருக்கின்ற நமக்குமேலானஜீவர்களிடமிருந்து உதவியைப்பிரார்த்தித்தல்குற்றமாதல் நியாயமன்றே! மனிதனின் விகாசமுறையிலும், அவ்விகாசமுறைசம்பந்தமான உலகங்களின்விருத்தியிலும் சம்பந்தப்பட்டதேவர்கள் அநேகர் இருக்கின்றார்கள்; கணபதி, சரஸ்வதி முதலானவர்கள்; அவர்களைநோக்கி உதவியைநாடுகிறவர்களுக்கு உதவிசெய்யவும், அறிவைக்கொடுக்கவும், புத்தியைத்தெளிவுபண்ணவும், எப்போதும் ஆயத்த

மாக இருக்கிறார்கள். இவர்கள் போன்று மற்றும் அனேக விதமானதேவர்கள் உள்ளார். இப்போது சுருங்கச்சொல்லி யிருக்கிறதே போதுமானது.

4. மனிதனைப்போல, மனிதப்பிறப்பாக இராத தேவ புருஷனிடம் உயர்வான பிரார்த்தனைசெய்தல் கூடாதென்று உண்டோ? அதற்குக்காரணமும் உண்டோ? சக்கரவர்த்தி க்கு ஒருவன் விண்ணப்பம்செய்யவேண்டுமானால், அவரிடமே நேரில்செய்ய வேண்டுமென்பதில்லை. தான்வசிக்கும் ஜில்லா விலுள்ள ராஜபிரிதிநிதியாகிய உத்தியோகஸ்தரிடம் விண் ணப்பத்தை கொடுத்தால் போதுமானதுதான். சக்கிரவர்த்தி யின் ஸ்தானத்தில், பிரதிநிதியாகிய உத்தியோகஸ்தரை அங் கீகரித்தல், ராஜதுரோகமாகமாட்டாது. ஈசுவரபிரிதிநிதியா கியதேவர்களுக்குஆராதனைசெய்தலும், பிரார்த்தனைபண்ணு தலும், குற்றமன்று, ஈசுவர துரோகமாகமாட்டாது. மே லும் படிப்பில்லாத சாதாரண மனிதனுக்கு, இந்திரிய கோசரமில்லாத ஈசுவரனை அல்லது மஹாபுருஷனை ஒரு வகையாக ஸ்வரூபப்படுத்திக்கொண்டு, அவருடைய பிரத் தியக்ஷ சக்தி, வல்லமையை தான் நேரில் அனுபவிப்பதாக உணர்ந்து, அதனால் அவரிடம் அன்பும், பக்தியும் பாராட்டு தல் இயல்பாகவும், எளிதாகவும் இருக்கிறது. இப்படி நடத் தலினால், வியக்தமில்லாதஈசுவரனின் திவ்வியசந்நிதானமுஞ்

சக்தியும் பரவியதாகும்; கண்டும் காணுததுமான கம்பீர மான அருள் பிரவாகம் சம்பவிப்பதாகும்; மனிதனின் வாழ்நாளுக்கு ஒரு கவுர்வத்தையும் உயர்வையும் அகன்ற நன்மையையும் உண்டுபண்ணுவதாகும்.

5. மனிதன் அறிவில் அபிவிருத்தியாகி, விகாசம்பெற வும், தேவர்களுக்கு பிரார்த்தனையும், ஆராதனையும் செய்கி ருன் இல்லை. அவர்கள் தம் கைங்கரியங்களைச்செய்வதில், இவன் விருப்பு வெறுப்புக்களை வேண்டுகிருர்களில்லை. இவ னும் அவர்களால்கிடைக்கும் உதவியை அங்கீகரிக்கிருன். வயதான புத்திரன், தன்பிதா அன்பினுலும் அறிவினுலும் தனக்குவேண்டுவதை செய்வார் என நம்பி, அவரை, இது வேண்டும் அதுவேண்டாம், என வருத்தப் படுத்தாமல் இருப்பதுபோல, விகாசம்பெற்றவனும் அறிவில் முதிர்ச்சி அடைந்தவனுமான மனிதன் ஒழுகுவான். ஆயினும் தே வர்களை பக்தியுடன் கொண்டாடுவான். உலகத்திற்கு அவர் கள் செய்திடும் கைங்கரியத்துக்காக நன்றிபாராட்டுவான்.

6. மனிதவிகாசமுறையில், சம்பந்தமான தேவர்க ளுக்கு, ஆராதனையும் பூஜையும் செய்யவேண்டியதுநியாயம் தானே. மனத்தின் அபிவிருத்திவிஷயத்திலும், அது தெ ளிவுபெறுதலிலும் அதற்கு உபதேசம் செய்தலிலும் அவர் கள் பிரியத்துடன் உதவிபுரிகின்ருர்கள். கணபதி, சரஸ்

வதி இவர்களுக்கு பூஜைசெய்வதினுல், அவர்கள் அனுகிர கம்செய்ய, ஒருவன்படிப்பு இலகுவாகவும், சிரமமில்லாத தாகவும் ஏற்படுகிறது. எழியருக்கு வலியர் உதவிபுரிதல் என்ற தர்மநீதியாக, தேவர்கள் என்ற நம்மின் மிக்கோர்களுடைய சிநேகத்தினுலும், ஆதரவினுலும், உலக நெறி பிரகாசம்பெற்றும், நம்முடைய வாழ்நாள் சுகிர்தமடைந்தும் நடைபெறும். மனிதன் தனிமையாக இருக்கவேண்டுவதில்லை; அவனுகவே, தனித்து இருக்கவேண்டுமென்றிருந்தால் ஒழிய, உதவிபுரிய ஆயத்தமாக இருக்கின்ற தேவர்கள் புழக்கமுள்ள இவ்வுலகத்தில், தனக்கு ஒருத்தரும் உதவிபுரிவார் இல்லையே, என்றுத் தயங்கித்தபிக்கவேண்டாம். மனிதஉதவியில்லாமல்நிற்கெதியாயிருக்கின்றவனுக்கும்கூட, தேவர்களின் அனுகூலமான சிநேகமும் ஆதரவும் கிடைக்கிறது. அதனுல் ஹிந்துவாலிபன், தன்னுடைய மதம், உண்மையாகவும், அறிவுக்கு ஒத்ததாகவும், இருக்கிறது என்று எண்ணுக! பிறர் அறிவில்லாமல் பரிகாசம் பண்ணுதலால் தான் மயக்கம்கொள்ளற்க! ஜகத்தேல்லாம் பிரகாசமுள்ள தேவர்கள் நீக்கமறநிறைந்திருக்கின்ருர்கள் என்றும், அன்புள்ளமுகமும், அபயம்செய்ய நீட்டினகையும், உள்ள தேவர்கள் எங்கும்தங்கியிருக்கின்ருர்கள் என்று மகிழ்க.

---

## 3-ம் அதிகாரம்.

:o:

## திருமூர்த்திகள்.

மகம்மதியமதம் நீங்கலாக, பூர்வீகம் நவீனமுள்பட எல்லாமதங்களிலும், ஈசுவரன் பிரபஞ்சத்தில் திருமூர்த்தியாக வியக்தப்படுகிறார் என்ற உபதேசம் உள்ளது. வியக்தமாக மூன்று உருவங்களாக தம்முடைய மூன்று அம்சங்களையும் வெளிப்படுத்துகிறார். இவ்வுபதேசம் மிகப்பழைமையானது; இதன் பழைமையும், இஃது எங்கும் பரவியிருத்தலும், இதன் உண்மைக்குத்தக்க சாக்ஷியாம். யூதர் (Jews) மதத்திற்கும் மகம்மதிய மதத்திற்கு நெருங்கிய சம்பந்தம் உண்டு. சாதாரணமான ஜனங்களுக்குள் நடைபெற்றுவந்த யூதர் மதத்தில், ஈசுவரனின் முப்பான்மையான அம்சங்களைப்பற்றித் தெளிவாயும், வியக்தமாயும், பிரஸ்தாபமில்லை. அக்காலத்தின் நிலைமையை உத்தேசித்து ஈசுவரனின், ஏகபாவத்தன்மையைப்பற்றித்தான், பலமான பிரஸ்தாபம் இருந்தது. ஆனால், யூதர்களின் அறிஞர்களுக்குள்ளும் தத்துவஞானிகளுக்குள்ளும் நடைபெற்ற உபதேசங்களில், ஈசுவரனின் முப்பான்மையான தன்மையைப் பற்றி வியக்தமாகவும், தெளிவாகவும், பிரஸ்தாபம் இருந்திருக்கிறது.

2. ஈசுவரன், ஜகத்து, அவர் அதனுடன் சம்பந்தம், இவைகளைப்பற்றி ஆராயுங்கால், முப்பான்மை, இன்றியமையாத தர்மம் எனத்தெரியவரும். ஜகததுடன் ஈசுவரன் சம்பந்திக்கின்றமையால், அவர் தனித்தனியான மூன்று பாவங்களாகத்தான், (அதற்குமேல் இல்லை.) வியக்தப்பட வேண்டுவதாக ஏற்படுகிறது. ஒரு பிரபஞ்சம் என்றால், அதற்கு ஆதிஉண்டு; ஒவ்வொரு பிரபஞ்சமும், பிரகிருதி, புருஷ சம்பந்தததினால், காலவரம்புக்குட்பட்ட ஒரு ஏற்பாடு; எப்போது காலத்தின்வரம்பு ஏற்பட்டதோ, அதற்கு ஆதி உண்டு. இக்காரணத்தினால், ஈசுவரன் தான் சிருஷ்டி கர்த்தாவாகத்தோன்றி, ஒரு பிரபஞ்சத்தை உருவப்படுத்தி அமைக்கின்றார். சூன்னியத்தினின்று பிரபஞ்சம் உற்பத்தியில்லை. ஏற்கனவே என்றுமுள்ள, உபகரணங்களைக்கொண்டு பிரபஞ்ச சிருஷ்டி ஏற்படுகின்றது. அப்படி சிருஷ்டித்த பிரபஞ்சத்தை காப்பாற்ற வேண்டுவதற்காக, ஈசுவரன் ரக்ஷகராகத்தோன்றுகிறார்; மாறிமாறிக்கொண்டிருக்கும் பிரபஞ்சத்திற்கு சூத்திரம்போல, இருக்கின்றார்.

“மயி ஸர்வமிதம் ப்ரோதம்

ஸூத்ரே மணிகணா இவ”—கீதை

இதன்பொருள்:—

நூலில் மணிகளைக்கோர்த்தாற்போல, என்னிடத்தில் இந்த சகல பிரபஞ்சமும் கோக்கப்பட்டிருக்கின்றன.

3. பிரபஞ்சம் காலவரம்புக்குட்பட்டு இருக்கின்றமையால், எப்போதும்நிலைத்திராது; அதுவும் கிழத்தன்மையை அடைகிறது; தேய்ந்தும், இளைத்தும், போகின்றது; அழிவுக்கு ஆயத்தமாகிறது; அதாவது, தான் முந்திருந்த மூல உபகரணங்களாக மறுபடியும் மாறுகிறது; அதனால் ஈசுவரன் சம்ஹாரமூர்த்தியாகத் தோன்றுகிறார்; உலகத்தை அழிக்கின்றார்; பின்னர், மூவரும் ஒன்றாக ஆகின்றார்கள். தூக்கம் அதாவது, பிரளயம் உண்டாகிறது. இவ்விதமாக ஈசுவரனின் இராப்பகல்கள், மாறிமாறித் துயர்கின்றன.

4. இம்மூவர் உண்மையில் ஒருவராகவே இருப்பினும், சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் என்ற முத்தொழில்களுக்கு, அததன் அறிகுறியான ஸ்வரூபமான புருஷன் ஏற்படுகிறார். இம்மூவர்களைத்தான் திருமூர்த்தி என்று சொல்லுகிறது.

ஆதிபிரானும் அணிமணி அண்ணலும்
ஆதிக்கமலத்து அமர்ந்திருந்தானும்
சோதிக்கில் தொடர்பில் ஒன்றும்
பேதித்து உலகம் பிணங்குகின்றாரே. (திருமந்திரம்)

(கமலம்—தாமரைப்புஷ்பம்.)

5. சிருஷ்டிகர்த்தா, பிரமதேவர். அவர் நாலுமுகமுடையவராக சொல்லுகிறதுண்டு. ஒவ்வொருமுகமும் ஓர்

ஓர் திக்கை நொக்கியதாம். அவர் கவனம் எல்லாத்திக்கிலும் இருக்கின்றது என்பதைக்குறிப்பிடுகிறதற்காக, அந்த ரூபம் அவருக்கு ஏற்பட்டுள்ளது. மேலும், தாமரைப்புஷ்பத்தில் இருக்கின்றார் எனவும் சொல்லப்படுகிறது.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌮𑍀𑌶𑌂 𑌕𑌮𑌲𑌾𑌸𑌨𑌸𑍍𑌥𑌮𑍍.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்கு தம்முடைய விஸ்வரூபத்தை காட்டியபோது, பிரமதேவரை அர்ச்சுனன் தாமரைமலரில் இருக்கின்றதாகப்பார்த்தான். தாமரைப்புஷ்பமானது பிரகிருதி, புருஷர்களுக்கும், நீர், நெருப்புக்கும், பிரதீகமாக ஏற்பட்டுள்ளது; அதனால், பிரகிருதி புருஷத்தன்மைகளை பிரபஞ்சமாக சிருஷ்டிக்கின்ற பிரமதேவருக்கு தாமரைப்புஷ்பம் சரியான ஆஸனமேயாம்.

6. ஸ்திதிகர்த்தா, காப்பாற்றுகின்றவர் விஷ்ணு. விஷ்ணு, என்ற பதத்திற்கே, எங்கும் பரவுதல், ஊடுருவிச் செல்லுதல், என்பது பொருள். அதனால், அவர் அந்தர்யாமியாக இருந்து எல்லாவற்றையும் ஆதரிக்கிறார். அவர் நாலு கைகள் உள்ளவராக உருவகப்படுத்தப்பட் டிருக்கின்றார். நாலுகைகளும் நாலுதிக்குக்களை நோக்கியாம். அவர் உதவியும், ஆதரவும், எல்லாவிடங்களிலும் உள்ளது என்பதை காட்டும்பொருட்டாம். உலகத்திற்கு க்ஷேமக்குறை ஏற்

படும்காலத்தில், ரக்ஷகராகிய விஷ்ணுவினின்று, தர்மத்தை ஸ்தாபிக்கவும், அதர்மத்தை துலைக்கவும், அவதாரங்கள் உண்டாகின்றன. அந்தந்த அவதாரங்களில், ரக்ஷிப்பு சக்திகள் பிரகாசிக்கும்.

7. சம்ஹாரகர்த்தா சிவன்; மகாதேவர், சிவன் என்ற பதத்திற்கு, மங்களம், சுகிருதம், ஆநந்தம், என்பது பொருள். உருவங்களை நாசம்செய்து ஜீவர்களைத் தன்னுடன் சேர்த்துக்கொள்ளுகின்றார். அவருடைய சாந்தநிலை எல்லாரையும் அணைந்து சூழ்ந்து ஆலிங்கனம் செய்கின்றது; அதனால் ஜீவர்கள் ஆநந்தபதவியை அடைகின்றார்கள். 'சம்ஹாரகர்த்தா' என்றபதம் நம்முடையகாதில் 'கொடுமையாகப்' படுகின்றது. துக்கத்தினின்று 'விடுவிக்கின்றவர்' என்ற பதம் நம்முடைய காதிற்கு இன்பமாகவும், உண்மையில் சரியான சப்தமாகவும் இருக்கும். ஏனென்றால், அவர், ஜீவர்களை துன்பங்களினின்று விடுவித்து, சாந்தமான பதத்தைக் கொடுக்கின்றார். அவருடைய அடையாளமான அறிகுறிகள் இவை—புலித்தோல், சர்ப்பம், சந்நியாஸவேஷம் என்பனவாம். புலித்தோல் என்பது, புலித்தன்மையான, கீழானபாவங்களை உடைய அசுத்தமனத்தை அதாவது ஆசுரபாவங்களை துலைத்தலுக்கு அறிகுறி. அத்தோலை ஆடையாகக்கொள்ளுதல் என்றால் அசுத்தமனத்தை ஜயி

த்தல் என்பதாம். சர்ப்பம் ஞானத்தின் அறிகுறி. சர்ப்பத்தை ஆபரணமாக அணிகிறவர், பூர்ணஞானத்தை உடையவராவர். சந்நியாஸவேஷம் எதற்கு என்றால், அவர் உலகத்தில் செய்யும் தொழில், தமக்கன்று, உலகத்தின் சுகிர்தத்தின், அதாவது க்ஷேமத்தின்பொருட்டு என்று குசிப்பிக்கவாம்.

8. சாதாரணமாய் விஷ்ணுவுக்கும், அவர் அவதாரங்களான ராமகிருஷ்ணாதிகளுக்கும், பிரார்த்தனைகள் செய்கின்றார்கள். அது நியாயமே. அவரே ரக்ஷிக்கிற மூர்த்தி, அவரே பிரபஞ்சத்தை நடத்துகின்றவர்; எல்லாரையும் ஆதரிக்கிறவர்; யாவருக்கும் பிராணநாதர். பிதாவின் ஹிருதயம்போல், எல்லா ஜீவர்களையும், தம் குழந்தைகளாக பாவித்து, அன்புபாராட்டுகின்றவர்; நம்முடைய நொய்மையையும், நம்முடைய குறைவையும், நன்றாய் அறிந்து இரங்குகின்றவர்; அதனால் நமக்கு உதவிபுரிகிறவர்; நமக்கு பலத்தையும் தைரியத்தையும் அருளுகின்றவர் அவரே; வெளிப்பிரபஞ்சத்தில், எங்கே எங்கே, சந்தோஷமும், பிரகாசமும், அழகும் உண்டோ, அவை எல்லாம் அவருடைய அம்சம். அவர் ஜீவராசிகளை வசியப்படுத்தும் அருள் சக்தி; அவர் கிரகஸ்த்தனுக்கு சுகிர்தம்செய்யும் மூர்த்தி, கிரகரக்ஷகர், எல்லாரிடமும் அன்புள்ளவர். அவர் அன்புமயமானவர்.

9. உலகத்தின் ஆசாபாசங்களை விட்டும், அவைகளின் அனுபவங்களில் இளைத்தும், சுகதுக்கங்கள் நம்மை வசப்படுத்திக்கொள்ளாமல் இருக்கும் மனோ நிலைமையில், விரக்தியின் அழகே மூர்த்தீகரித்திருக்கின்ற சிவபெருமானிடம் மனது செல்லும்; விஷ்ணுவின் உலகசுகப்பிரசாதத்தைவிட, இன்னிலையில் சிவனுடைய ஞான அருள், நம்மை கவரும். விஷ்ணுவின் அறிகுறியான மயில் இரக்கையையும் பில்லான் குழலையும்விட, வெகு அதிகமாக, புலித்தோலாடையும் சர்ப்பாபரணமும், நம்மனத்தை இழுக்கும், வசியப்படுத்தும். துறவி, யோகி, வார்த்திகன், வானப்பிரஸ்தன், சந்நியாசி, இவர்களுக்கு உரித்தான மூர்த்தி சிவபெருமானே. அவரிடம் பக்தி பாராட்டல் என்றால், சாந்தமான பதவியை அணுகுகிறோம், என்பதாம்.

சர்வேசுவரன் மூன்று உருவங்களாக வியக்தப்படும் திருமூர்த்தி விஷயத்தைப்பற்றி எண்ணம் கொண்டால் மேற்கண்ட சிந்தனைகள் உண்டாகும்.

---

## 4-ம் அதிகாரம்.

## ஸ்ரீகிருஷ்ணன்.

யார் ஜனங்களின் ஹிருதயத்தை மிகவும் கவர்ச்சி செய்கின்றார்களோ, அவர்கள் ஜனங்களால் மிகவும் துவே

ஷிக்கவும்படுகிறார்கள். இதற்கு பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் தக்க சாக்ஷியாம். பூமியின்கண் சரீரமெடுத்துக், குழந்தை யாக ஜீவிக்கும் காலத்தில், குழந்தையாகவும், யௌவனமான மனிதனாகவுமிருந்த பகவான் கிருஷ்ணனை, பெற்றோர்களும், கோபாலர்களும், கோபிகைகளும், பாண்டவர்களும், எப்படி அன்பு பாராட்டிக்கொண்டுவந்தார்கள் என்பதையும், கம்ஸன், சிசுபாலன, துரியோதனாதிகள் எப்படி அவனை த்வேஷித்து பகைபாராட்டி வந்தார்கள் என்பதையும், நாம் அறிவோம். அக்காலம் முதல், இந்தியாவில் எத்தனையோ கோடான கோடிப்பெயர்களுக்கும், விருத்தருக்கும், பால்யருக்கும், ஆண் பெண் எல்லாருக்கும் ஸ்ரீகிருஷ்ண என்ற பெயரைவிட பிரியமுள்ளதும் சுகிரதமுமான வேறு பெயரும் உண்டோ? இந்தியாவில், ஞானமுறை குன்றியிருக்கின்ற சமீபகாலத்தில், அறிவீனர்களும், பேதைகளும், அவர் பெயரைவிட வேறு எவர் பெயரை மிகக் கொடுமையாகவும், அக்கிரமமாகவும் தூஷணம் செய்கிறார்கள்? மேனாட்டு கிருஷ்ணன, கிறிஸ்து, என்பாரின் கதியும், அவர் வாழ்நாளிலும் பின்னரும், இவ்விதமாகவே நடைபெற்றது. அவர் தாயார், அவர் சிஷர்கள், பக்தர்களாகிய சில பெண்பாலர்கள், அவரை பிரீதியுடன் போற்றினார்கள். ஜனங்களில் தலைமையானவர்கள், அவரை த்வேஷித்து, கடைமுறையில் அவரைக் கொன்றுவிட்டார்கள்.

அக்கால்முதற்கொண்டு, கோடானகோடி ஜனங்கள் அவர் மேல் அன்புபாராட்டிப் போற்றிவருகின்றார்கள்; அப்படியேகோடான கோடி இதர ஜனங்கள் அவரை துவேஷித்து, பல துர்பாஷையால், அவரை நிந்திக்கின்றார்கள். இது உலகத்தின் தர்மம். இஃது உலக இயல்பு.

2. இவ்விரண்டு மஹாத்துமாக்களான, மேனாட்டு கிறீஸ்து என்பார், கீழ்நாட்டு கிருஷ்ணன் என்பார், ஹிந்து ஒருவர், யூதர் ஒருவர்; இவ்விருஞானாசாரியார்களின் சரித்திரங்களின், அனேக முக்கியமான விஷயங்களில், ஒற்றுமையும் பொருத்தமும் இருத்தலை நாம் பார்ப்போம். கிறீஸ்து என்பார் பிறப்பினால் கீழ்நாட்டவராயினும், அவர் ஞான உபதேசம் மேல் நாட்டில் முழுவதும் பரவியிருக்கின்றது. மேனாட்டு ஜாதியார்களின் க்ஷேமத்தின் பொருட்டே அவர் அனுப்பப்பட்டார். மேனாட்டு ஜாதியார்கள் கிறீஸ்து என்பாரிடமிருந்து பெற்ற ஞான உபதேசங்கள் கீழ்நாட்டார்களுக்கு, முன்னரே, ஈசுவரத்தன்மைபொருந்திய பல ஞான ஆசாரியர்களால் ஏற்பட்டுள்ளன. ஹிந்துகளுக்கு மனுவும், ராமசந்திரமூர்த்தியும், கிருஷ்ண பகவானும், கணக்குக்கு அடங்காத ரிஷிகளும் ஏற்பட்டிருந்தார்கள். இம்மஹாபுருஷர்கள், ஹிந்துக்கள் அனுஷ்டிக்க முடியக்கூடிய விஷயங்களுக்கு அதிகமாகவே, ஏராளமான உப

தேசங்களை அருளியிருக்கின்றார்கள். அவ்வுபதேசங்கள், அழகானவார்த்தைகளால் அமைக்கப்பெற்றிருக்கின்றன. பின்வந்த ஆசாரியார்கள் அவைகளுக்கு நடையிலும் பொருளிலும் எவ்விதத்திலும், சீர்ப்படுத்த முடியாவண்ணம் அவ்வளவு அழகாயும், உயர்வாயும் அமைந்திருக்கின்றன. சீனர்களுக்கு லேயோட்ஸே (Laotze) என்ற ஞானகுரு இருந்தார். இவர்ஞானம் அகன்றும் ஆழ்ந்துமிருந்தது. எல்லாரையும் அணைத்து ஆதரிக்கும் காருண்ணியமுள்ளவர். இவரைத்தவிர, சீனர்களுக்கு மஹா ஞானமூர்த்தியும் காருண்ணிய மூர்த்தியுமான பகவான், கவுதம பௌத்தர் இருந்தார். இவர்களுக்கும் ஜப்பானியருக்கும், ஸையாமீஸ் ஜாதியாருக்கும், பர்மாக்காரர்களுக்கும், சிங்களவர்களுக்கும், திபெத்தியாருக்கும் அந்த அற்புதமான ஞான மூர்த்தியும் காருண்ணிய மூர்த்தியுமான பௌத்தர் இருந்தார் என்றால், வேறு ஞானகுருவும் வேண்டுமோ? பார்சிகர்களுக்கு, அக்கினி புத்திரரான, ஜாரத்துஷ்டிரா என்ற ஞான உபாத்தியாயர் இருந்தார். இவரை விட இருளை நீக்க வேறு ஒருவரும் வேண்டுமோ? புதிதாக உண்டான, பாலர்களான மேனாட்டாருக்கு, ஈசுவரத்தன்மை பொருந்திய புருஷன் ஞான உபதேசம் செய்யவேண்டியதாக இருந்தது. அதனால் கிறீஸ்து என்பார் அனுப்பப்பட்டார்.

3. இந்த ஞான ஆசாரியர்கள் எவ்விதம் தமக்குள்ளே, சகோதரபாவம் பாராட்டுகிருர்களோ, அவ்விதமே, அவர்கள் சிஷர்களும், அவர்கள் வழிப்பட்டு ஒழுகுகின்றவர்களும், தங்களுக்குள், ஒருவர்மேல் மற்றவர் சகோதரபாவமும் சினேகமும் பாராட்டக்கடவர்கள். ஆனல், அன்பானது ஞானத்தினல் பரிசுத்தமாக்கப்பட்டு உயர் நலம் பெறும்வரையில், அந்தோ! அந்த சுபாவமானது, மாற்சரியமுள்ளதாகவும், துர் அபிமானம்பற்றியதாகவும், இருக்கின்றது; அதனுல், ஒருவன் தன் அன்புக்குறியவஸ்து மாத்திரம் ஒப்பு உயர்வு அற்றதென்றும், மற்று எல்லாவற்றையும்விட மேலானதென்றும், நினைக்கிருன். இத்தகைய எண்ணம் துவேஷத்தை உண்டாக்குகின்றது. ஆகவே, ஸ்ரீகிருஷ்ண பக்தன், ஒருவன் மற்ற மூர்த்திகளை பஜிக்கின்றவர்களைப் பற்றி இகழ்ச்சிகொள்ளுகிருன்; அவர்களை மிலேச்சர் என நிந்திக்கின்ருன். பௌத்தரை பஜிக்கின்றவன், பௌத்த மத சங்கத்திற்கு புறம்பாக, உயர் ஞானிகள் இல்லை என உரையாடுகிருன்; கிறிஸ்துவனே, கிறிஸ்துவரின் உதவியின்றி இரக்ஷிப்புக்கிடமில்லை எனசாதிக்கிருன். பிற்பட்ட காலத்தில், சிரியா, அரேபியநாடுகளுக்கு, அனுப்பப்பட்ட உயர்வான தீர்க்கதர்சியாகிய மகமத் நபியின் வழிபட்டவர்கள், கர்வத்திலும் அகம்பாவத்திலும் ஏனையமதஸ்தர்களை விட, குறைவில்லாதாவர்கள். அவர்கள் ஏனையமதஸ்தர்களை,

"உண்மையான பக்தியில்லாத நாய்க்கூட்டங்கள் என்கிறார்கள்." இவ்விதமாக ஒருமதஸ்தர் மற்றையமதஸ்தரை, வெட்டன கடிக்கின்றார்; விழுங்கிவிடுவார்போலும். புண்ணியாத்மாக்களின் உயர்நலம் அமைந்த நாமங்களை நெஞ்சு பிளக்கும் குண்டுகளாக உபயோகிப்பார்கள். ஹிந்து மதமோ புராதனமானது; அதனால் அம்மதஸ்தர்கள், பிறமதஸ்தரை அன்புடனும் மரியாதை உடனும் நடத்தவேண்டும். தாங்கள் ஒழுக்கமுறையில் பிறருக்கு திருஷ்டாந்தமாக இருக்கவேண்டும். பிறமதஸ்தர்களையும், பிறஜாதியார்களையும்பற்றி, ஹிந்து வாலிபன் ஒருவனும் அவதூரான வார்த்தையையும், நிந்தனை மொழிகளையும், சொல்லாமல், நடைபெறவேண்டும். ஒருவன் உயர்வு, அவன் அன்பின் அகன்ற அளவையால் ஏற்படுமே அல்லாமல், அவன் அகந்தையின் அளவைபற்றி அன்று.

4. ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கும் கிறீஸ்து நாதருக்கும் அவர்களின் சரித்திரங்களால், சமானமான விஷயங்கள் அநேகமுண்டு என்று முன் பிரஸ்தாபித்தேன். இவ்விதம் பிரஸ்தாபித்தலுக்குக் காரணமுண்டு. மஹாபுருஷர்களின் ஒழுக்கமுறை சாதாரண மனிதர்களின் ஒழுக்கமுறை போன்று இராது. அவர்களின் ஆயுஸ்காலத்தில் சம்பவிக்கும் வர்த்தமானங்கள் சாமானியதிருஷ்டாந்தமாக நிகழ்கி

ன்றன. வெளிப்படையில், உலகசம்பவங்களாகவும், விஷயங்களாகவும், ஜீவாத்தும விகாசமுறையில், தத்துவங்களாகவும் காணப்படுகின்றன. இத்தகைய தர்மம் எல்லாக்காலத்திலும் எல்லாத்தேசத்திலும் நடைபெறுகின்ற உண்மை. அறிஞர்கள் இம்மஹாபுருஷர்களின் சரித்திரத்தை எழுதுகிறதில், அவர்கள் ஆயுஸ்காலத்தில் நிகழ்ந்த சாதாரண விஷயங்களையும், அவைகளின் விவரணங்களையும் அதிகமாக பிரஸ்தாபியாமல், தத்துவங்களையும் உண்மைகளையும் பிரகாசிப்பிக்கும் வர்த்தமானங்களை அதிகமாக வற்புறித்துச்சொல்லுவார்கள். பிற்காலத்திய ஞானமில்லாதமூடர்கள், இவ்வுண்மைகளை அறியாமல் மதிமயங்கியும், ஞான உபதேசம் நிறைந்துள்ள சம்பவங்களை துரர்த்தம் பண்ணியும், அம்மஹாபுருஷர்களையும் ஏளனம் செய்கின்றார்கள்; நிந்திக்கின்றார்கள். ஸ்ரீ கிருஷ்ணபகவானும், கிறீஸ்துநாதரும் இவ்விதமாக மிகவும் நிந்தனைக்குள்ளாயிருக்கின்றார்கள்.

5. இரண்டு சரித்திரங்களிலும் சமானமான விஷயங்களைப்பற்றி இப்போது சொல்லுவேன். 1. இருவர்களுடைய மாதக்கள் மஹா பரிசுத்தர்களாகவும், ஈசுவர பக்தியுள்ளவர்களாக இருந்தார்கள்; 2. தங்களுடைய குழந்தைகள் கர்ப்புத்தில் இருந்தகாலத்தில், அவர்களின் பொ

ருட்டு பலவிதமான துன்பத்திற்குள்ளானார்கள். 3. தேவானுக்கிரத்தால் ரக்ஷிக்கப்பட்டார்கள். 4. அவர்கள் பிறக்கு முன்னமே அவர் பிறப்பார்கள் என்று முன்னறிவிக்கப்பட்டிருந்தது, அவர் பிறந்த நாட்டு அரசன், அவர்களை கொலைசெய்ய எத்தனமுள்ளவனாக இருந்தான்; ஆனால் அவ்வெத்தனம் பயன் படவில்லை. 5. இருவரும் பிறக்கும்போதே, பூர்ண ஞானமுடையவர்களாக இருந்தார்கள். 6. பின்பு தகுந்த வயதுள்ள மனிதர்களாகி, உயர்நலம் அமைந்த நீதிமுறை தர்மமுறைகளை ஜனங்களுக்கு உபதேசித்தார்கள். 7. இருவரும், மரண மடைந்தார்ப்போலகிடந்தவனை பிழைப்புமூட்டினார்கள்; அப்படி உயிர்ப்பிக்கப்பட்டவன் (இருவர் சரித்திரத்திலும்) விதவையின் புத்திரனாக இருந்தான். அநேக அற்புத சித்திகள் காட்டினார்கள். உதாரணமாக சொற்ப உணவை வைத்துக்கொண்டு பெருங்கூட்டத்தார்களுக்கு சாப்பாடு போட்டார்கள். 8. அன்புடனும் பணிவுடனும், ஜனங்களின் பாதத்தை அலம்பினார்கள். 9. இருவருடைய மரணம் வெளித்தோற்றத்தில், துக்ககரமாகவும் இருந்தது. ஸ்தூலசரீரம் மரணமானவுடனே இருவரும் உற்சாகத்துடனே சுவர்க்கத்தை நோக்கிச்சென்றார்கள். இருவருடைய மதசாஸ்திரங்களில், உலகத்தில் இருவருடைய சரித்திரநடை, பொதுவாய் ஒரே மாதரியாக இருந்தது.

6. ஸ்ரீ கிருஷ்ணாவதாரம், கிறீஸ்துவின் அவதாரத்திற்கு வெகுகாலத்திற்கு முன்னிருந்ததைக்கொண்டு, பின்னிட்ட கிறீஸ்துவின் சரித்திரம், ஸ்ரீ கிருஷ்ணசரித்திரத்தினின்று பார்த்து எழுதப்பட்டது என்ற தப்பான அபிப்பிராயத்தைக் கொள்ளவேண்டாம். மஹாத்துமாக்கள் உலகத்தில் அவதரித்தால், அவர் அவர் இருந்த காலதேச வர்த்தமானங்களுக்கு தக்கவாறு, அவர்கள் ஒழுகுவாராயினும், பொதுவாய் அவர்கள் வாழ்நாள் நடைமுறை ஒரே தன்மையாகவே நிகழும். ஒருவர் மற்றவரை பார்த்து நடந்தார் என்பதில்லை. ஒரே மலையை இரண்டு சிற்பிகள் ஒரே மாதிரியாக சித்திரிப்பதுபோல்வதாகும்.

---

## 5-ம் அதிகாரம்.

---:o:---

### ஸ்ரீ கிருஷ்ணபகவான் முன் தோடர்ச்சி.

---

ஸ்ரீ கிருஷ்ணன் கோபிகளிடம் வைத்திருந்த சம்பந்தங்களைப்பற்றி தூஷணையாகப் பேசுவார்கள். இவ்விஷயத்தைப்பற்றி கொடுமையான நிந்தனை மொழிகள் சொல்

லுவார்கள். ஆனால் இதற்கு சாதாரணமான பொதுப்ப டையான சில சமாதானங்களும் உண்டு; ஆழ்ந்த உயர்ந்த உண்மை தங்கிய சமாதானமும் உண்டு.

ஸ்ரீ கிருஷ்ணன் ஜீவித்திருந்த நாளில், அவருக்கு பல பகைவர்கள் இருந்தார்கள். வரம்புகடந்தும் அவர்கள் அவரை நிந்திப்பார்கள். அநேக, அக்கிரமங்கள் செய்ததாக, அவர்மேல் பழிகளை சுமத்துவார்கள். அவர்கள் ஒருவ ரும், ஸ்திரீகளுடன் அவர் விபசாரம் செய்தார்என்ற பழி யை, சொன்னார்களில்லை. அவருக்கு கொடிய விரோதி, சிசுபாலன் என்பான். கொடுமையான அவதூர்களை அ வர்மேல் சரம் சரமாகப் பொழியுங்காலத்தில், ஸ்திரீ சம்மந் தமான பழிப்பைச் செய்தானில்லை. உண்மையில், அவர் ஸ்திரீகளுடன் வைத்திருந்த சம்மந்தங்கள் அக்கிரமமான வைகளென்றும் பழிப்புள்ளவைகளாகவும் இருந்திருக்கு மாகில், அவர் விரோதிகள் அவைகளைப்பற்றி முக்கியமாக வும் பலமாகவும் தூற்றுவார்கள் அன்றோ?

2. ராஸலீலை என்ற விளையாட்டை கிருஷ்ணன் செ ய்யவில்லை என்றும், பின்பு ஏற்பட்ட கட்டுக்கதை என் றும், அல்லது பாகவத புராணம் எழுதியவர், ஸ்ரீ கிருஷ்ண பகவான், அன்பினால், மனிதர்களின்மனத்தை கவர்ச்சிசெய் கின்ற சுவாபத்தை, உருவகப்படுத்தி சொன்னாரே ஒழிய

வாஸ்தவமாய் நடந்த விருத்தாந்தம் சொன்னாரில்லை என்றும், சிலர் அபிப்பிராயம் படுகிறார்கள். மற்றும் சிலர் அபிப்பிராயத்தில், ஸ்ரீ கிருஷ்ணன் ஈசுவரனாவர்; கோபிகைகள் ஈசுவரசிருஷ்டியாவர்; ஆகவே, தங்களுடைய புருஷர்களைவிட, ஈசுவரனுக்கு அதிக உரிமையான பாத்தியப்பட்டவர்கள். அதனால், அப்படி ஸ்ரீ கிருஷ்ணன் ஸ்திரிகளுடன் சம்பந்தம் வைத்திருந்ததினால் குற்றமில்லை என்கிறார்கள். இந்த அபிப்பிராயம் சரியன்று; ஈசுவரன், மனிதனாகத் தோன்றினால், தம்மால் ஸ்தாபிக்க பெற்றுள்ள, பரிசுத்தம், பதிவிரதாதர்மம் இவைகளுக்கு, தம்முடைய நடத்தையால் பங்கம் பண்ணுதல் கூடாதே! அதனால் அப்படிச் செய்திருக்கமாட்டார்.

3. ராஸலீலை, நடந்தது என்ற அபிப்பிராயத்தில், நான் இணங்குகிறேன். ஆனால் அது சம்பந்தமான விஷயங்கள் எல்லாருக்கும் தெரிந்த வெளிப்படையானவை; யாதொரு தோஷமும் ஆரோபணம் செய்யும்படியான மாதிரியாக அது நடக்கவில்லை. ஸ்ரீ கிருஷ்ணன் பாலன், குழந்தை; அதனால், அக்கிரமமான ஸ்திரீ சம்பந்தங்கள் நேரிட இடமில்லை. அவ்விதமான ஸ்திரீ விஷய நினைப்புக்குக்கூட இடமில்லாமலிருந்தது.

4. ஆனால் பாகவதத்தில் உபயோகிக்கப்பட்டுள்ள பாஷையானது, காமரஸமுள்ளதாக இருக்கின்றமையால்,

ஸ்திரீவிஷய அனுபவம் இருந்தேதீரவேண்டும் என்று சிலர் ஆக்ஷேபிக்கிறார்கள். இதனால் பாதகம் இல்லை. இதனால் அந்த சித்தாந்தம் ஏற்படாது; பாஷையானது எழுதிய வரைப்பொருத்தது. நான் இனிச்சொல்லப்புகும் தத்துவமானது உண்மையாக இருக்குமாகில், அன்பின் மிகுதியை புராணிகர் இன்னும் சிருங்கார ரஸத்துடன் விவரித்திருக்கப்பாலது, என்று தோன்றும். எல்லா காலங்களிலும், எல்லா மதங்களிலும், ராஸலீலையில் பிரீதிகப்படுத்தப்பெற்றிருக்கிற சம்பந்தத்தை, மனத்தை சந்தோஷிபிக்கக்கூடிய சிருங்கார ரஸத்திற்குறியபாஷையால், விவரித்தல் இயற்கை. கிறிஸ்துவர்களின் விலையநூலில் சாலோமன்—கீதம் என்பது இதற்கு தக்க சாட்சியமாக ஏற்படும். பாகவத புராணத்தைவிட இதலினுள்ள விவரணம் இன்னும் அதிக சிருங்காரரஸமுள்ளதாக இருக்கிறது.

இக்காலத்தியர் இத்தன்மையான பாஷையை உபயோகித்தல், அவ்வளவு சரியில்லை என்பார். மனத்தில் கல்மஷமான எண்ணங்கள் உண்டு பண்ணவேணுமென்ற கருத்துடன், இத்தகையவிவரணம் எழுதப்படவில்லை, என்பது நிச்சயம்.

5. மேலும் இன்னும் ஒரு சமாதானம். பிரஸ்தாபித்த லீலையானது, ஸ்தூலமான ஜாக்கிர்தா அவஸ்தையில்

நடந்ததன்று. கோபாலர்கள் தங்களுடைய ஸ்திரீகள் தங்களுடனே கூட இருந்ததாகவே எண்ணியிருந்தார்கள் என்று, பாகவதத்தில் வியக்தமாக சொல்லியிருக்கிறது. ஆனால் இந்த சமாதானம் அவ்வளவு திருப்திகரமானதன்று; அதே பாகவதத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் தம்முடைய மாயாசக்தியால் இந்த விதமான எண்ணத்தை கோபாலர்கள் கொள்ளும்படி செய்துவிட்டார் என்றும், பிரஸ்தாபித்திருக்கிறது. அதாவது, உண்மையில், கோபிகைகள், ஸ்ரீ கிருஷ்ணனுடன் கூடவே இருந்தார்கள். ஆனால் அவர்களின் புருஷர்களே, தங்களுடன் தங்கள் ஸ்திரிகள் இருந்தார்கள் என்றே பொய்யானநினைப்பை கொள்ளும்படியாக, ஸ்ரீ கிருஷ்ணன் மோசமாக மயக்கிப்போட்டார்.

6. உண்மையான சரியான சமாதானம் இதுவாம்—ஸ்ரீ கிருஷ்ணன் அவதாரபுருஷன்; அவருடைய செய்கைகளால் அனேக பெரிய தத்துவங்களை உபதேசித்தார்; அவைகளில் ஒன்று, ஈசுவர பக்திக்கு இடையூறான உலகப்பற்றுக்களை ஒழித்து அன்னியவிஷயங்களில் சிந்தை கொள்ளாமல், பரம பிரீதியுடனே ஜிவாத்மா பரமாத்மாவினிடம் பக்தி பாராட்டுதல் என்பதாம். உலக சம்பந்தமான பிரியம், அன்பு, எல்லாம், ஈசுவர பக்தியை உண்டுபண்ணுவதற்காகவே ஏற்பட்ட சாதனங்களாம்.

ஈசுவரபக்தியை தடுக்கவும் கெடுக்கவுமன்று. பிரபஞ்சத்தில் ஸ்திரீபுமான்களுக்குள் நிகழும் அன்பானது, ஜீவாத்துமாவுக்கும் பரமாத்துமாவுக்கும் உள்ள அன்பின் பிரதிகமாக, இருக்கிறதென்று ஆன்றோர் அபிப்பிராயம். ஸ்திரீயானவள் தன்னுடைய புருஷனைச் சரணமாக அடைதலானது, ஜீவாத்துமா பரமாத்துமாவைச் சரணமாக அடைதலின் மாதிரியாம்; ஆத்மதியாகத்தின் அறிகுறியாம். இதுதான் ஈசுவரபிரணிதானம். இந்த உயர்நலம் அமைந்த உண்மையை ஸ்ரீ கிருஷ்ணபகவான் உபதேசித்தார். இவ்வுபதேசம் எவ்வித ஆக்ஷேபனைக்கும், பழிப்புக்கு இடமில்லாமல் இருத்தல் பொருட்டு, தாம் குழந்தையாக இருந்தகாலத்தில் கோபிகளுக்கு உபதேசித்தார்; மேலும் கோபிகளோ சாதாரண ஸ்திரீகள் அல்ல; அவர்களும், அவர்கள் பர்த்தாக்களும், (கதையின் வரலாற்றின் பிரகாரம்) முந்திய ஜன்மாந்திரத்தில், தெய்வத்தன்மை பொருந்திய மஹா பக்தர்கள், மஹரிஷிகள்; இந்த ஜன்மத்தில், தங்களுடைய பரமபக்தியை, ஸ்திரீகளாக ஜன்மமெடுத்து ஸ்திரீகள் தங்களுடைய சுகிர்தமான குழந்தையின் மீதுபோல, ஸ்ரீ கிருஷ்ண பகவானிடம் பிரியத்தை பாராட்டிக்காட்டினார்கள். கோபாலர்களும், கோபிகளும், ஸ்ரீகிருஷ்ணனைப்பற்றிகானம் செய்திருக்கிற ஸ்துதிகளை கவனித்தால், ஸ்ரீ கிருஷ்ணனை ஈசுவர அவதார மூர்த்தி என்றும், அவர் மனிதனால் செய்யு

முடியாத அற்புதமானலீலைகளைகாட்டினார் என்றுமே, மதித்தார்கள். முற்பிறப்பில் ரிஷகளாய் இருந்து, இப்பிறப்பில் மனிதஸ்திரீகளாக சரீரமெடுத்த இக்கோபிகள், சிரேயஸ்கரமான இக்குழந்தையை அன்பால் தேடிபிடித்தார்கள். முதலில் ஸ்ரீ கிருஷ்ணன் மறைந்துகொண்டு, அந்த லீலையால் அவர்களிடம் தாம் நேரில் இருந்தாற்போலவே, இல்லாதகாலத்திலும், அவர்கள் மனத்தில் பக்தியை உண்டு பண்ணுவர்; பின்பு நேரில் தோன்றுவர். பின்பு, தானே, பலராக தோன்றிக் காட்டுவர்; இரண்டு இரண்டு கோபிகளுக்கு மத்தியில் தாமிருக்கிறதாகக் காட்டுவார்; ஈசுவரனிடம் பரமபக்தி பாராட்டுகிறவனுக்கு, அவனுக்கு மாத்திரம் பிரபஞ்சத்தில் ஈசுவரனிருக்கிறதாகத் தோன்றுவர், என்ற உபதேசத்தை வற்புறுத்தி காட்டுமாறு இவ்விதம் செய்தலானார். ஸ்ரீமத் பாகவதத்தின் இவ்விதமாக விவரித்திருக்கிறது. இவ்விதமாக விவரித்திருக்கிறதில், புராணிகர், ஜீவாத்துமா பரமாத்துமாக்கள் ஏகிபாவப்படும் முறையை எழுத முயலுவதில், பாஷையின் சிருங்கார ரஸத்தில் அழுந்தி, எத்தனை பக்தர்களோ அத்தனை கிருஷணனாக தம்மை உண்டுபண்ணி இருப்பவரான அந்த அற்புதமான தெய்வத்தன்மை பொருந்திய குழந்தையை சிந்தித்து இருப்பதில், இக்காலத்திய விஷம புத்தியுள்ளவர்களின் மனோரதத்தை அப்புராணிகர் நினையாமல் மறந்தார்போலும்.

இவ்விஷம புத்தியுடையவருக்கு, கோபிகள் தங்கள் புருஷர்களை விட்டு, விஷயசுகத்தை நாடி, வியபசாரம் செய்தார்கள் என்றும், அதற்கு பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் உடந்தையாகவிருந்தார் என்றுமே, தோன்றும்.

கதையை உண்மை யென்று வைத்துக்கொண்டால், கதை முழுமையையும் சேர்த்து ஆராயவேண்டும். அக்கதையின் நாதன், தகுந்த மனிதப்பிராயமுள்ளவராகக் கொள்ளுதல் கூடாது; குழந்தையாகவே பாவித்தல் வேண்டும்; சாதாரணக் குழந்தை அல்ல; நினைத்த மாத்திரத்தில், தன்னைப்பல குழந்தைகளாகப் பெருகச்செய்து கொள்ளும் சக்தியுடைய குழந்தை இது; அக்கதையில் நடமாடுகிற மற்றவர்கள், காமவிஷயத்தை ஜயித்து தாண்டிய ரிஷிகளென்றே நினைக்கவேண்டும். சாதாரண மனிதரால் இயலாத அமானுஷியமான விஷயங்களை முற்றும் மறைத்து, ஸ்ரீ கிருஷ்ணனை சாதாரண மனிதனுகவும், அவருடைய சிநேகிதருடைய ஸ்திரீகளை சாதாரண ஸ்திரீகளாகவும் பாவித்து, அந்த ஸ்திரீகளை தங்களுடைய புருஷர்களை விட்டு, வியபசாரிகளாக தம்மிடத்தில் வரும்படியாக ஸ்ரீ கிருஷ்ணன் செய்வித்தார் என்றும், அபிப்பிராயப்படுதல் அக்கிரமமாம். உண்மையாக நடைபெறும் கதை வரலாற்றில் குற்றத்தையும் பழியையும் ஏற்ற கருதி, சிலபாகத்தை

மாத்திரம் எடுத்து உதகரித்தும், மற்றபாகத்தை மறைத்தும், இவ்விதமாக பொருள்செய்தல் சத்தியத்திற்கு அழகன்றும். விபரீதமான அறிவென்றே கொள்ளற்பாலது. இப்பூலோகத்தில், இந்த கதையானது, ஞானத்தை உருவகப்படுத்தியுள்ள ஒரு லீலையாக நடந்தது.

7. இவருடைய சரித்திரத்தில், இன்னும் ஒரு விஷயம் ஆக்ஷேபனைக்கு இடம் கொடுக்கிறதாகச்சொல்லுகிறதுண்டு. அதாவது:—கோபிகளின் வஸ்திரத்தை எடுத்துவைத்துக்கொண்டு, அவர்களை நிர்வாணமாக தம்முன் வந்து அவ்வஸ்திரங்களை திரும்ப வாங்கிக்கொண்டு போகும்படி செய்தல். இது ஞானதீக்ஷையின் ஒரு பிரதீகம். அம்முறையை உருவகப்படுத்திக் காட்டியிருக்கின்றது. அப்போது அவர் வயது ஐந்து. அவ்வயசில், விஷயசம்பந்தமான, விஷமஎண்ணங்கள், உதயமாதல் முடியாது. மேலும் பரமாத்துமாவைஅடையவேண்டுமானல், அம்முயற்சியுள்ளவர்கள் யாவரும், உலகப்பற்றுக்கள் யாவற்றையும் துறக்கவேண்டும் என்பதின் அடையாளம்; அதன் அறிகுறியாக, இக்கதை நடைபெறுகின்றது. ஒருகிறீஸ்துஞானி சொல்லுகிறபிரகாரம் "பற்றில்லாத பேசுவை, பற்றற்றார் பற்றுக."

"அற்றது பற்றெனில், உற்றது வீடு,
உயிர் செற்றது மன்னுறில்,
அற்றிறை பற்றே என்றார்" நம்மாழ்வார்.

உலக விஷயத்தில் அழுந்தினவன் இக்கதைக்குக் குற்றம் சொல்லுவான் தான். கதை, எதின் அறிகுறியோ, அந்தத்துறவிமார்க்கத்தையும் அவன் இகழ்ந்துபேசுகிறவன் அன்றோ? இந்த உயர்ந்த துறவு நிலையை அடைய முயலுகிறவர், இக்கதையின் அழகையும், உண்மையும், அறிவார்.

8. ஸ்ரீ கிருஷ்ணபகவானை நிந்திக்கிறவர்கள் கிறீஸ்துவரின் விவிலியநூலின் கண்ணுள்ள அடியில் வரும் பாசுரத்தின் உண்மைக்கு லக்ஷியமாவார். உதாரணமாவார், "சாதாரண மனிதன் சிரேயஸ்கரமான ஞானவிஷயங்களை ஏற்கான், அவைகளுக்கு செவி கொடான் அவைகள் அவனுக்கு பிதற்றல்போலவேகாணும். அவ்விதமே ஞானிகளையும் அறியான்." ஆகவே, ஞானவித்தை, சாதாரண உலகத்திற்கு, குப்த வித்தையாகவே எப்போதும் நிகழும்; அதை ஆயினும் எப்போதும் அறிகிறவர் சிலராவது இருந்தேதீருவர்.

---

## 6-ம் அதிகாரம்.

### ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றியது.

(முன்தொடர்ச்சி.)

---

1. மற்றும் ஒருகுற்றம் ஸ்ரீகிருஷ்ணனின்மேல் ஏற்றுவார்கள். அவர் ஜனங்களை தீயவழியில் நடத்தினர்; அக்

கிரமங்களை செய்யத்தூண்டினார். இதற்கு வழக்கமாக ஒரு திருஷ்டாந்தம் சொல்லுவார்கள்; அது மஹாபாரதத்தினின்று எடுத்துக்காட்டப்படுகிறது. யுதிஷ்டரை பொய் சொல்லும்படிசெய்தது.

2. பதினான்குநாளாய் குருக்ஷேத்திரத்தில் மும்மரமாய் யுத்தம் நடந்துவருகிறது. 15-ம் நாள், பாண்டுபுத்திரனான அருச்சுனனுக்கும், அவன் குருவான துரோணாசாரியாருக்கும் பலமான போர்நடக்கிறது; ஒருவர் மற்றவரை எவ்விதத்திலும் வெல்லமுடியவில்லை. கடைசியாக, யுத்தம் செய்தலைவிட்டுவிலகி, வேறுமுகமாக தனித்தனியே திரும்பினார்கள். தம்முன்னுள்ள எதிரிகளை தும்சம்பண்ணிக்கொண்டு செல்லுகிறார்கள். அப்போது, அசுவத்தாமா கொலையுண்டு மரணமடைந்தாரென்று, யாரானும் ஒருவர் துரோணாசாரியாரிடம் சொல்லவேண்டுமென்று ஸ்ரீகிருஷ்ணன் சொன்னார். அசுவத்தாமா துரோணருடையகுமாரன். தம்முடைய குமாரன் மரணமடைந்தார் என்று துரோணருக்குத்தெரிந்தால், அவர் இனி யுத்தம்செய்யார் என்று எல்லாருடைய அபிப்பிராயம்.

3. அருச்சுனன், ஸ்ரீ கிருஷ்ணனுடைய முக்கியமான சிஷன். அவருக்கு மஹாப் பிரியமுள்ளவன்; பொய் சொல்லி, ஜயம்பெறமறுத்துவிட்டான்; அது சத்துருவைக்

கொல்லும் உபாயமாக இருந்தாலும், பொய்யுரை தகாத காரியம் என்றுசொல்லி, பொய்யால் வெல்லல் தன் தகைமைக்கு முற்றும் புரம்பானது என்றான். அத்தன்மையான சமுசயமில்லாதவனும், அத்தன்மையான பழி பெரிதென்று நினையாதவனுமான பீமன், அசுவத்தாமா என்று பெயருள்ள ஒருயானைக்கொன்றான்; பின்பு, 'அசுவத்தாம' கொல்லப்பட்டான், என்று துரோணர் கேட்கும்படி இறைந்துகூவினான். இது வார்த்தையால்மட்டும் உண்மை, பொருளால்பொய்யானது. துரோணர் இதைக்கேட்டு திடுக்கிட்டு சற்றுமனம்கலங்கினார்; பின்பு, இதை நம்பாமல், மூவுலகத்தின் ராஜ்யாதிபத்தியம்வரினும் யுதிஷ்டிரர் பொய் சொல்லார் என்று நம்பினவராய், மேற்கண்டபடி அசுவத்தாமா மரணமடைந்தவிஷயம் வாஸ்தவமாயென்றுவினவி அவருக்குச்சொல்லி அனுப்பினார்.

4. யுதிஷ்டிரர் சொல்லத்தயங்கினார். அப்போது 15-ம் நாள்யுத்தம்; துரோணரை ஒருவராலும் ஜெயிக்கமுடியவில்லை. மஹாபராக்கிரமசாலி. அவர்முன் பாண்டவர்களின்சேனை வரவரக்குறைந்துகொண்டுவருகிறது. யுதிஷ்டிரர் சொல்லத்தயங்கிச்சந்தேகித்துநிற்கவே, அருகாண்மையில் இருந்த ஸ்ரீகிருஷ்ணன், அசுவத்தாமா மரணமானான் என்று சொல்லு என்று அவருக்குச்சொன்னார். ஸ்ரீகிருஷ்

ணன் சொல்லச்சொன்னரே என்றசொல்லை ஆதரவாக வைத்துக்கொண்டு "அசுவத்தாமா மரணமானன்" என்று உறத்திச்சொன்னர். ஆனல் தம்வாய்க்குள்ளே மாத்திரம் "யானை" என்றமொழியைச்சேர்த்தார்; வார்த்தையால் மெய் போலகாட்டி, உண்மையில் பொய்யையேசொன்னர்.

5. இந்த சமயத்தில், ஸ்ரீ கிருஷ்ணன், வியக்தமாக பொய்யையே சொல்லும்படி உபதேசித்தார். அவர்மேல் இது பெரும்பழியாக ஏற்றப்படுகிறது.

6. இதற்கு சமாதானம்-மனத்தின் உறுதிப்பாட்டை இவ்விதமான சோதனைகளால் ஈசுவரன் பரீக்ஷிப்பது வழக்கம்தான். முக்கியமாக பூர்ணம்பெற எதிர்பார்க்கிறவர்களுக்கு, ஏதேனும், குறை அல்லது மனச்சோர்வு, இருக்கிறதாஎன்று பார்க்கிறதற்கு, இத்தன்மையான சம்பவங்கள் நேரிடுகிறது உண்டு. தற்கத்தினலும் மற்றைய ஆதாரத்தினலும், தெரிந்துகொள்ளுகிறதைப் பார்க்கிலும் இவ்வித பரீக்ஷைதான் சரியானது. எவர்வார்த்தையில் நம்பிக்கையோ, அவர்மூலமாக, மேலான உயர்பதவிக்குப்போக முயற்சிக்கின்றவர்களின், தர்மச்சிந்தையின் உறுதிப்பாட்டையும், சத்தியத்தில் அவர்களுக்கு உள்ள நன்நம்பிக்கையையும், தர்மகாரியத்தின் அவர்களுக்கு இருக்கும் திருடமான மன நெகழ்ச்சியையும், சத்தியம் அசத்தியம் என்றதை பகுத்

தறியும் ஊக்கத்தின்பலத்தையையும், ஈசுவரன் பரிக்ஷிக்கிறார். வழக்கமாக மற்றவர்கள் சம்பந்தமாய், பிறர்மூலமாக ஈசுவரன்செய்யும் சோதனையை, இப்போதுதமக்குச்சுகிருதமான சினேகிதர்களான அருச்சுனனையும் மற்றப்பாண்டவர்கள் மூவர்களையும், தாமே பரீக்ஷித்தார். அவர்களில் அருச்சுனன் ஒருவன்தான், பரீக்ஷையில், சத்தியத்தினின்று வழுவாமல் உறுதியாகநின்றான். யுதிஷ்டருடைய, மனநொய்மையும், மனச்சோர்வும் வெளியாயிற்று; பரீக்ஷையில் நிலைத்துநிற்கவில்லை. இதனால், அதிகத்துன்பத்திற்குபின்பு உள்ளானார். இவ்விதசோதனையினால் கடைசியில், தூயரானார். அந்த சொற்பக்குறைவு இருந்தது, அதுவும் நீங்கிற்று. தன் மரணகாலத்தில், இவ்விதமான வேறு ஒரு சோதனைநேர்ந்தது; அதாவது தன்னைநம்பி அடைக்கலமாகவிருந்த ஒருநாயை விட்டுவிடவேண்டுமென்று, ஒருதேவர் இவரை பலஉபாயங்களினாலும் வேண்டினார். இவர் அதற்கு இணங்காமல், சத்தியநெரியினின்று விலகாமல் உறுதியாக இருந்தார். சத்தியமுறையைவிட்டு விலகுவதினால் சுவர்க்கம் கிடைப்பதாயிருப்பினும், நீதிநெறியினின்று விலகோம் என்று சொல்லிவிட்டார்.

7. இவ்விதமாக ஈசுவரன் நம்மை மிகவும் சோதிக்கிறார். அதனால், நாம்சத்தியமார்க்கத்தில் உறுதியாக இருக்க

வும், பூரணம்பெறவும், யோக்கியதையை உண்டுபண்ணுகிருர். பிதாவின் வார்த்தைக்கு விரோதமாக, ஸ்ரீ ராமனை தமக்கு ஜனனத்தினுல் உரித்தான மகுடத்தைதரித்து இராஜ்ஜியபரிபாலனம் செய்யவேண்டுமென, தம்முடையகுருவான வசிஷ்டர் ஆஞ்ஞாபித்தார்; ஸ்ரீ ராமர் மறுத்துவிட்டார். பரதரை அப்படி செய்யவேண்டுமென ஆஞ்ஞாபித்தார்; அவரும் மறுத்துவிட்டார். ஸ்ரீ ராமர், பரதர் இவர்களாக, தாமே அவதரித்து சோதனைகளைவென்று இவ்விதம் நடத்தவேண்டுமென்று தாமே ஒழுகிக்காட்டினுர். ஸ்ரீ கிருஷ்ணனுக அவதரித்ததில் சோதித்தும், மனிதன் சத்தியத்தையே செய்யவேண்டுமென்றும், எப்பேர்ப்பட்டவர் என்னசொன்னுலும்சரி, அசத்தியமானசெய்கைகூடாதென்றும், ஈசுவரன் உபதேசிக்கிருர்.

8. சுயநயம் பாராட்டாமலும், சீஷனின் ஞான உபதேசத்திற்கும், கடவுள் ஒருவரே இவ்விதம் பரிக்ஷிக்கக்கூடியது. கடவுளாக பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் இவ்விஷயத்தை நடத்தினுர்.

9. சாதாரணமாய், மனிதர்கள் வார்த்தைகளாலும், வெளித்தோற்றங்களாலும், தங்களை ஒருவழியாக நடத்திக்கொள்ளுகிருர்கள். பொதுவாக சொல்லும் பக்ஷத்தில் சிலர் பெரியவர்கள்விஷயத்தில் நேரிடும் சில முக்கியமான சோதனைகள் மாத்திரமல்ல, எல்லாசோதனைகளும், இடை

றுகளும், எம்மாதிரியாக இருந்தாலும், அவையெல்லாம், ஈசுவரசங்கற்பமே. நாம் விகாசமுறையில் அபிவிருத்தி அடையவே, அவர் இவைகளை உண்டுபண்ணுகிறார். ஈசுவரனே ஸ்ரீ கிருஷ்ணனாக மனிதசரீரமெடுத்தார் என்றும், அவர்செய்த காரியங்கள் அமானுஷியமானவைகள் என்றும், ஈசன் செயல்கள் என்றும், நாம் நினைக்கவேண்டும். நமக்குநேரிடும்சோதனைகள்கூடத்தெய்வ ஆஞ்ஞைஎன்றும், நம்முடைய நன்மையைக்கருதியவைகளாக இருக்கின்றனவென்றும், அவர்மூலமாக நாம் தெரிந்துகொள்ளுகிறோம். கிறீஸ்துவர்களின் விவிலியநூலில் (1 Kings xxii 19, 20) இதேமாதிரியாகவே, ஈசுவரன் நடத்தியதாகவே சொல்லியிருக்கிறது. பொய்சொல்லும் ஒரு தேவதூதன், ஒரு இராஜாவை மயக்கி தீயவழியில்நடக்கும்படி தான் செய்துவிடுகிறதாகச்சொல்ல, அதற்கு இறைவன் இணங்கி, அப்படியேசெய்யுக, என்று அனுமதிகொடுத்ததாகக்கண்டிருக்கிறது. உறுதியாகவும், பிறழாமலும், நடைபெறுகின்ற ஒரே ஈசுவரசங்கற்பம், உலகவிகாசமுறையைநடத்துகிறது, என்ற உண்மையை அறியாதவர்கள்தான், ஸ்ரீ கிருஷ்ணபகவான் செய்கைகளை அறிய கஷ்டப்படுவார்கள். வியக்தப்பட்டிருக்கிற மனிதச்சரீரத்திலும், அவியக்தத்தைப்போலவே, அவருடைய உண்மையை அறிதல் கஷ்டம்தானே. அவ்விதமும் இவ்விதமும் இருக்கின்றவர் ஈசுவரன்தானே.

## 7-ம் அதிகாரம்.

---:o:---

### சிராத்தம்.

---

1 "சிராத்தம் செய்வான் ஏன? அதன் பிரயோஜ னம் யாது"? என்றகேள்விகள் ஹிந்துவாலிபர்கள் அடிக் கடி கேட்கின்றார்கள். அவைகளுக்கு சமாதானம், ஹிந்து மத தூஷணையின் பரிகாரத்தைப்பற்றிய இப்புஸ்தகத்தில், எழுதுவது பொருத்தமாகத்தொன்றுகிறது.

2. மரணத்தின்மேல், கண்ணுக்குப்புலப்படாத லோ கங்களுக்குப் போகிறவர்களுக்கு, உதவிபுரிதல் என்றவழக் கம் எங்கும் இருக்கின்றது என்பதை நாமும் முதல் முத லில் அறிதல்நலம். பிராசீன நாகரீகங்கள் அழிந்துபோய் அவைகளின் சின்னங்களாகமிகுந்து உலகத்தில் தங்கியிருக் கின்ற அநாகரீகர்களான வனவாசிகள் (Savages) கூட இந் தக்கடமையை மறந்தார்கள் இல்லை. இறந்தவர்களின் பிரே தங்களுடன், தங்கள் அறிவின்மைக்கு ஏற்ப, விலையுயர்ந்த சாமான்களையும், ஆயுதங்களையும், சேர்த்து புதைத்துவந் தார்கள். சிலவேளை இறந்தவர்களின், பிரியமானகுதிரை, நாய், இவைகளையும்கொன்று, அவர்கள் இனிப்போகும்லோ கத்தில் உபயோகமாகுமென்று நினைத்து, அவர்கள் பிரேதத்

துடன் புதைப்பார்கள். நாகரீகமுள்ள எல்லாஜாதியாரும் அறிவுள்ளமாதிரியாகவும், அதிக பிரயோஜனகரமாகவும் உள்ள, உரித்தான கிரியைகளேயும், ஸ்துதிகளேயும், மந்தரங்களுடனே செய்வார்கள். மந்திரங்களென்பன சக்தியுள்ள சொற்கள்.

3. ஜொராஸ்துஷ்டிராவின் மார்க்கத்தினர்கள், இறந்தவர்களுக்கு பலனுள்ள ஆராதனேகளே எப்போதும்செய்து வருகிறார்கள். ஆனல், உணவு, உடைகள், முந்திருந்த உத்தேசத்தைவிட்டு, விலக்கப்பட்டிருக்கின்றன. இறந்தவர்களின் பிரயோஜனத்தை உத்தேசித்து, இருக்கிறவர்களுக்கு இவ்வுணவு உடைமுதலியவைகளே தானம்செய்யவேண்டும். இறந்தவர்களுக்குக்கொடுக்கிறதென்றால் பிரயோஜனமில்லே. முடியவும் முடியாது. இறந்தவர்களின்மேல் உள்ளபிரியந்தால், ஞாபகச்சின்னமாக அவர்களே உத்தேசித்து,உயிருடன் இருக்கின்றவர்களுக்குத்தான் உணவு, உடை, முதலிய எல்லாத்திரவியங்களேயும் தானமாகக்கொடுக்கிறது முன்னுள் வழக்கம். அப்படிக்கொடுக்கிறதினல், தானம்பெற்றவர்கள் நன்றிபாராட்டுவார்கள். அவர்கள்மனம் குளிர்ந்து பாராட்டும் நன்றியுள்ள எண்ணங்களும், நலமான மற்றசிந்தனேகளும், இறந்தவர்களுக்கு மறுஉலகத்தில், சாந்தத்தையும், சுகிருதத்தையும் உண்டுபண்ணும்.

4. பௌத்தர்களுக்குள், இறந்து போகிறவர்களுக்கு நேரான பிரயோஜனத்தை உண்டுபண்ணக்கூடிய கிரியைகளைச்செய்துவருகிறார்கள். சமீபகாலத்தில் ஜப்பான்தேசத்தில் **பௌத்தர்களின் ஷின்டோ** வகுப்பினர்களுக்குள், இப்போது சமீபத்தில் நடந்தயுத்தத்தில் மரணமானவர்களை உத்தேசித்து, ஆராதனைகள்நடந்தன. கடற்சண்டையின் யுத்தவீரரான அட்மிரல் டோகோ என்பார், இறந்தவர்களைநோக்கி, அன்புடனேயும், நன்றிஅறிவுடனேயும், உருக்கமாக சிலவார்த்தைகள் வசனித்தார். மறுஉலகத்தில் இறந்தவர்களைச்சுற்றிலும், அன்பும் ஆதரவுமான இச்சிந்தனைகளின் அலைகள்மோதி அவர்களுக்கு சுகிருதத்தை உண்டுபண்ணும் என்பதில் சந்தேகமில்லை.

5. பிடிவாதமான சில புராடஸ்டண்டுகேள் நீங்கலாக, ஏனையகிறிஸ்துவர்களுக்குள், இறந்தவர்களுக்கு ஆதரவான ஆராதனைகள் நடைபெறுகின்றன. கிறிஸ்துமதத்தின் பிராசீனசாகைகளான கிரீக்சர்ச்சு, ரோமன்காதலிக்சர்ச்சு, இவைகளைச்சார்ந்தவர்கள், சிராத்தக்கிரியைகளைப் போலவே, அவைகளின் தத்துவத்தை அனுசரித்தே, இறந்தவர்களுக்கென்று, ஆராதனைகள் கிரமமாய் செய்துவருகிறார்கள். சக்தியுள்ள வார்த்தைகள் அதாவது மந்தரங்களும், சக்தியுள்ள அங்கந்நியாசங்களும், கரந்நியாசங்களும், உபயோகப்பட்டு வரு

கின்றன; ரொட்டி, ஜலம், ஒயின், இவைகள் அக்கிரியைக ளில் உபயோகிக்கப்படுகின்றன. ஆங்கிலர்களுக்குள், மேலான சர்ச்சுவகுப்பினர்கள் (High church party), இந்தப்புரா தன உயர்வான உபயோகமுள்ள வழக்கத்தை அனுசரித்தே, இறந்தவர்களின் க்ஷேமத்திற்காக, பிரார்த்தனைகள் செய்து வருகிறார்கள். கீழான சர்ச்சு வகுப்பினர்கள் (Low church party), இதுமுதலான கிரியைகளை, உபயோகமற்றவைகள் என்றும், அறிவீனமானசெய்கைகள் என்றும், மதித்து, விட்டுவிட்டார்கள். இராஜாங்கத்தாரால் அங்கீகரிக்கப் பட்ட சர்ச்சினின்று (The established church) புறம்பாக இருக்கின்ற கிறீஸ்துவர்களின் ஒரு வகுப்பாரும் (Non conformists), இவ்விதமான அபிப்பிராய முள்ளவர்கள் தான். இந்திரியகோசரமில்லாத இவ்விஷயங்களைப்பற்றிய அபிப்பிராயம் தப்பானது; அறிவின்மையால் ஏற்பட்டது. இவ்விதத்தப்பான அபிப்பிராயமும், இப்போது வரவரக் குறைந்துகொண்டுவருகிறது.

6. மற்றமதங்களில் அரைகுறையாக அனுஷ்டானத் தில் இருக்கின்ற ஆராதனைகள், ஹிந்துமதத்தில், ஒழுங் காகவும், யுக்திக்கு ஒற்றுமையாகவும், நேர்மையாகவும், பூர் ணமாகவும், முன்னாட்களிற்போல இந்நாட்களிலும் இடை யறாதுபடித் துயர்ச்சியாகச்சிராத்தங்கள் ரூபமாக நடத்தப்

பட்டுவருகின்றன. மற்றமதஸ்தர்களைப்போலவே, இக்காலத்தில், ஹிந்துக்களில் பெரும்பான்மையார், சிராத்தங்கள், ஆராதனைகள், இவைகளுக்கு ஆதாரமான உண்மைகளையும், தத்துவங்களையும், அறிந்துகொண்டார் இல்லை. புத்திசாலியான பாலர்கள் இவைகளைப்பற்றிக்கேள்விகள் கேட்கும் காலத்தில், வயதில்மூத்தவர்கள் தங்களுக்கே தெரியாமையால், சமாதானம்சொல்ல முடியவில்லை; இதனால் பாலர்களுக்கு, இவைகளைப்பற்றி நம்பிக்கைகுன்றி, சிரத்தைக்குறையேற்படுகிறது. மரணத்திற்குப்பிற்பட்ட நிலைமைகளைப்பற்றி நாம் தெரிந்துகொண்டால், சிராத்தத்தின் உண்மையையும், அதன் பிரயோஜனத்தையும் நாம் அறிவோம்.

7. "மனிதன் மரணமடைகிருன்," என்றல்—அன்னத்தால் ஆய அன்னமய கோசமான ஸ்தூலசரீரத்தை விட்டு வெளியேறுகிருன். பாக்கியிருக்கின்ற நான்குகோசங்களை வைத்துக்கொண்டு வெளியேறுகிருன். அப்போது அவனுடைய வெளிக்கவசம் பிராணமயகோசம். அது, பிராணகலைகளால், ஆனது. இப்பிராணகலைகள், சூக்ஷ்மமான ஆகாசதிரவியங்களை அவலம்பித்து நிகழ்கின்றன அதனுல் ஆங்கிலநூல்களில், இதை ஆகாசதிரவியம் அமைந்தகோசம் (Etheric body) என்று சொல்லியிருக்கிறது, இந்தக்கோசத்தில் அதிககாலம் மனிதன் தங்குகிருனில்லை.

இதுவும் பிரகிருதிசம்பந்தமான லோகத்தைச்சார்ந்தது. முன்னிருந்த இடத்தைச்சுற்றியே இந்தக்கோசம் சஞ்சரிப்பதாகும். அதனால் அவனை வெளியேறவொட்டாமல் ஜயிலிலுள்ள கைதியாகநடத்தும்; ஸ்தூலதேகத்தை ஹிந்துக்களில் நடைபெறுகின்ற நல்லவழக்கப்படி தகனம்செய்வித்தால், பிராணமயகோசத்தின்கட்டு பிறிந்துவிடுகிறது. இறக்கிறவன், பிடிவாதமாக அக்கட்டுக்குலையாமல் இருக்கவேண்டுமென்று தீவரமாகவிரும்பினால் ஒழிய, இதுநேரிடும். தகனமில்லாமல் ஸ்தூலசரீரத்தைப் புதைத்தால் ஸ்தூலசரீரம் சிதைந்துச் சிதறும்வழியே, இந்த பிராணமயகோசத்தின் கட்டும் மெள்ள மெள்ள தாமிதமாய்ப்பிறிந்து சிதைந்து சிதறும். பிராணமயகோசம் சிதைந்துபோனபிறகு, மனிதனுக்கு இனிமேல் மநோமயகோசம் வெளிக்கவசமாக ஏற்படுகிறது. மநோமயகோசம், சிந்தனைகள், ஆசாபாசங்கள், காமங்கள், வாசனைகள், அமையப்பெற்றிருக்கிற தொகுதி. இவ்வித சூக்ஷ்மதிரவியங்களால் ஆன இந்த கோசமானது இறந்தமேல், வேறுவிதமாகமாறி, இவைகளுக்குள் தடித்தஸ்தூலமானதிரவியங்கள் ஒன்றுசேர்ந்து வெளிக்கவசமாக அமைகின்றன. இதற்கு காமரூபசரீரம் என்றுபெயர். இந்த காமரூபசரீரம் இருக்கிறவரையில், மனிதனுக்கு "பிரேதம்" என்றுபெயர்; மரணமடைந்தவன், பிரோதலோகவாஸி. அந்தலோகத்தில் பூதப்பிரேத

பிசாசங்கள் இருக்கின்றன. இந்த காமரூபசரீரம் சிதைந்த பின், மனோமயகோசத்தின் சூக்ஷ்மமானபாகங்கள், வெளிக்கவசமாக அமைகின்றன. மனிதன் பிதிராக ஆகிறான். பிதிர்க்கள்வசிக்கின்ற பிதுர்லோக வாஸியாக ஆகிறான். சில காலத்திற்குப் பிறகு, இக்கவசமும் சிதைந்து போகிறது. மனோமயகோசத்தின் மஹா சூக்ஷ்மமானபாகங்கள் மாத்திரம் மிகுந்திருக்கின்றன. மனிதன் சுவர்க்கலோகவாஸியாக ஆகிறான். அதுவோ பிரகாசமுள்ளஸ்தானம்; அதில் தேவர்கள் இருக்கிறார்கள். அந்த லோகத்தை மனிதன் அடைந்துவிட்டால், அவனுக்கு சிராத்தத்தினால் பிரயோஜனம் இல்லை; அதுவரையில் உண்டு.

---

## 8-ம் அதிகாரம்.

### சிராத்தம். (முன்தொடர்ச்சி.)

1. ஸ்தூலமான அன்னமயக் கோசத்தை, மனிதன் விட்டு வெளியேறினபிற்பாடு, அதாவது மரணத்திற்குப்பிறகு, அந்த அன்னமயக்கோசத்தை ஜலத்தால் கழுவிக்குளிப்பாட்டி, வஸ்திரத்தால் மூடி, ஸ்மசானத்திற்குத் தூக்கிக்கொண்டு போகிறார்கள், கொண்டுபோகும்போது, "ராம, ராம,

சீதாராம, மஹாதேவ, நாராயணு, கோவிந்தா" என்ற நாமங்களைச் சொல்லிக்கூப்பிட்டுக்கொண்டு போகிறுர்கள். அந்நாம உச்சாரணையால் அப்பிணத்தை சுற்றியும் ரக்ஷணை யான நல்ல சுவரத்தை உண்டுபண்ணுகிறுர்கள். ஸ்மசான கட்டத்தில், இறந்த மனிதனை "பிராசீனமான பழைய மார்க் கத்தின் போகும்படியும், உபயோகமற்றுப்போன தான் நீத்த ஸ்தூல சரீரத்தின் அருகாண்மையில் தங்காமல் போ வென்றும்" அர்த்தமுள்ள மந்திரங்கள் பூர்வமாக கிரியைகள் செய்யப்பெறுகின்றன. இம்மந்திரங்களின் சுவரத்தால் ஆகாசத்தில் சாந்தமும் இரக்ஷணகரமு மான சாதகங்கள் உண்டாகின்றன; அவைகளால், பிராணமயக் கோசத்தின் பற்றுவிட்டு அவிழ்கிறது; அக்கோசம் அவனைவிட்டு நீங்குகிறது; அவன் மனே மயக் கோசத்துடனே இருக்கிறுன். அவன் பரிசுத்த மாக வேண்டிய சம்ஸ்காரத்தைப்பெற ஆயத்தமாகி றுன். அவன் பிரேத லோகத்தில், பிரேதமாக இருக்கி றுன். அவன் பூமியில் நல்ல காலம் கழிக்காமல் இருந் திருப்பாணுகில் இந்த பிரேத லோகத்தில் அதிகசங்கடத் திற்கும் துன்பத்திற்கும் உள்ளாவான். சிராத்தகர்மங்கள்— ஏகோதிஷ்ட சிராத்தம்—இந்த லோகத்தில் நடைபெறு கின்றகாலத்தில் அவனுக்கு அனுகூலம் உண்டாகும்படி யாக நடத்துப்படுகின்றன. (1) மனேமயக்கோசத்திரவியங்

களில், ஸ்தூல, சூக்ஷ்மத்திரவியங்களைப்பிறித்து வேறுபடுத்தி வெவ்வேறான கவசமாகவரிசைப்படுத்தியும், அதன்மூலமாக, ஸ்தூல அம்சங்களை வெளிமுகமாக அமையும்படி பண்ணியும், அதனால் லகுவாயும் சீக்கிரமாயும், அவ்வெளிக்கவசம் அவனைவிட்டு பிரியும்படியாகவும், ஏற்படுகின்றன. (2) அந்த வெளிக்கவசம் பிரியும் விஷயத்தில் அந்த சிராத்த கர்மங்கள் அதிக சாதகமுள்ளவைகள். "அவைகள் சுத்தமாகட்டும்" என்பதுதான் மந்திரங்களின் பிரார்த்தனை. நம்மைச்சுற்றியிருக்கும் சூக்ஷ்மமான திரவியத்தில், இம்மந்திரங்களின் சுவரத்தினால், சூக்ஷ்ம அலைகள் உண்டாகி, பிரேத சரீரத்தைத் தாக்கி அதன்கண்ணுள்ள ஸ்தூலமான திரவியங்களை அலைசி ஒதிக்கியும், பிரேதஸ்வரூபத்தை சிதையும்படியும், செய்கின்றன. மந்திரத்தினால் சக்தி உண்டுபண்ணப்பெற்ற ஜலம் பிரேதத்தின் மேல்விடப்படுகிறது; அந்த ஜலமும், பிரேத ரூபம் உலைந்து சிதைந்து போகும்முறையில், அனுகூலமாக இருக்கிறது. இறந்தவன் சுற்றத்தார் உறவினர்களின் மத்தியில் பிரேதம்கொண்டு வரப்படுகிறது; அவனுக்கு உதவிசெய்ய விரும்புகிறார்கள்; வேண்டிய உதவியும் செய்கிறார்கள்; அவர்களின் அன்பும் ஆதரவும் நிறைந்த எண்ணங்கள் அப்பிரேத ரூபம் சிதைந்து போகுதலில் அனுகூலிகளாகவும் இருக்கின்றன.

2. இந்தக்கிருத்தியங்கள் ஒருவருஷகாலம்வரை செய்யப்படுகின்றன; சபிண்டீகரணத்துடன் முடிவுபெறுகின்றன. அக்கிரியையின் மூலமாகப் பிரேதலோகம்விட்டு, பிதிர்லோகம் சேறுகின்றான் என்று, மந்தர பூர்வமாக, வாசனை திரவியங்கள்போட்ட பாண்டங்களில், ஜலம விடப்படுகிறது. மனோமயக்கோசத்தை அவலம்பித்திருக்கின்ற புருஷன், பரிசுத்தம் செய்யப்பெற்று, சூக்ஷ்மமான திரவியங்களால அமைந்தப் பிரகாசமுள்ளப் பிதிர்லோகத்தில் வசிக்கும்படியான யோக்கியதை உள்ளவனாகிறான். உற்றாரும் உறவினர்களும் இந்த லோகத்திலிருக்கின்ற புருஷனுக்கு உதவி புரியக்கூடும். சுவர்கலோகத்திற்கு அநர்கமான திரவியங்கள் இவனைவிட்டு பிரிந்து விலகும்வரை, இத்தகைய உதவிப்பிரயோஜனமாக இருக்கும்.

3. பிராமண போஜன மூலமாகவும், தானங்கள் மூலமாகவும், உதவிசெய்யப்படுகிறது. சாப்பிடுகிறபிராமணனும், தானம் வாங்குகிற பிராமணனும் படித்தவனாக இருக்க வேண்டும் என்பது முக்கியமானவிஷயம். இறந்தமேல் ஜீவன் கதி இன்னவிதமாக நடைபெறுகிறது என்று தெரிந்திருக்கிற பிராமணனுக்குச் செய்யும் தானத்தால் பிரயோஜனம் உண்டு; அவனுடைய எண்ணங்களும், சிந்தனைகளும் இறந்தவனை நோக்கிச்செல்லும். இதைத்தெரியாத மூட

னுக்குத்தானம் முதலியவைகள் செய்தல் அவ்வளவு பலன் உள்ளதன்று. வேதம் தர்மசாஸ்திரம் புராணம் பாஷியங்கள் வியாகரணம் இவைகளில் பாண்டித்தியமுள்ளவர்களும், சாஸ்திரமுறைப்படி நடக்கிறவர்களும், மோக்ஷசாஸ்திரமுறையில் பயின்றவர்களும், சத்தியவான்களும், யோகிகளும், இவர்களை மாத்திரம் இத்தன்மையான சிராத்தங்களுக்கு வரிக்க வேண்டுமென்று, மஹாபாரதத்தில் உபதேசித்திருக்கிறது. "அறிவுள்ளவன், சிராத்தத்திற்கு வரிக்கப்பட்டவர்களை பரிக்ஷிக்கவும் வேண்டும்" (அநுஸாசநபர்வம்.)

4. சிராத்தங்களுக்கு ஆதாரமான உண்மைகள் இவையாம். தத்துவ ஞானிகள், இவைகளை நன்றாய் அறிவார்கள். சரியென்றே அங்கீகரிப்பார்கள். இவ்வுலகத்தில் இருக்கின்றவர்கள் மறு உலகத்திற்குப்போகிறவர்களைக்குறித்து இவ்விதமாக உதவி புரிந்து, சுவர்க்கலோகத்திற்குப் போதலை துரிதப்படுத்தல் கூடும்.

5. மேலும் இவ்வுலகத்தில் இருக்கும் காலத்தில், தாங்கள் இறந்தமேல், இவ்விதமான சிராத்தக்கிரியைகள் மூலமாக உதவி செய்வார்கள் என்று நம்பிக்கை கொண்டவர்களுக்கு, இருக்கின்றவர்கள் இவ்வித உதவிசெய்யாமற்போனால், இறந்தவர்கள் அதிகமாக வருந்துவார்கள். மிகக்

கிலேசிப்பார்கள். அதனால் இவ்விஷயம் மறக்கத்தக்க தன்று. நாம் எண்ணும் எண்ணங்களையும், சிந்திக்கும் சிந்தனைகளையும், இறந்து மறு உலகத்தில் இருக்கின்ற நமக்கு வேண்டிய சிநேகிதர்களும் பந்துக்களும் நன்றாய் அறிவார்கள், நன்றாய் உணருவார்கள். அவைகள் அவர்களை பாதிக்கவும் கூடும். ஆகவே, நம்முடைய உதவியை இறந்தவர்களின் பொருட்டுச்செய்யக்கடவோம். அவர்களும், பிரேத லோகம்தாண்டியமேல், நமக்கு அன்பும் ஆதரவும் உள்ள உதவியைச்செய்வார்கள்.

---

## 9-ம் அதிகாரம்.

:o:

### ஹிந்துமதம்—சாஸ்திரத்திற்கும், யுக்திக்கும் ஒற்றுமையானது.

---

1. மதத்திற்கும் சாஸ்திரத்திற்கும், 16-ம் நூற்றாண்டு முதல், ஐரோபாகண்டத்தில் பலமான போராட்டம் நடந்துகொண்டு வருகிறதில், சமீபகாலம்வரை மதக்கொள்கைக்கு வரவரச்செல்வாக்குக் குறைந்துகொண்டு வந்தது. பிரஹ்மஞானம் (Theosophy) தலைப்பட்டு, உண்மைகளை வெளியிடவே, சாஸ்திரக்ஞர்கள் கண் திறந்தார்கள். அதனால், நூதன நூதனமான தத்துவங்களைத் தெரிந்துகொள்ள

வேண்டுமென்ற ஆவா உண்டாகிக்கொண்டு வருகிறது. மேல்நாட்டில் நடைபெறுகிறக் கிறீஸ்துமதம் தத்துவஞானிகளை முற்றும் தவிர்த்துவிட்டது. அவர்களை, மதத்திற்குப்புறம்பாகத் தள்ளிவிட்டது. புஸ்தகங்களையும், பொதுஜனகூட்டத்தாருடைய அபிப்பிராயங்களையும் மாத்திரம் ஆதரவாகப்பெற்று இப்போது நடைபெறுகின்றது. அதனால் பிரத்தியக்ஷப்பிரமாணங்களின் ஆராய்ச்சியால் ஏற்பட்டுள்ளப்புலனறிவு சாஸ்திரத்தின் முன்நிற்க இயலாமலும், அதன் ஆக்ஷேபணைகளுக்கு சமாதானம் சொல்ல அசக்தமாகவும், இருக்கிறது. கிறீஸ்துமதத்தின் உண்மைகளை உணர்ந்த தத்துவஞானிகளைச் சாதாரணக் கிறீஸ்து மூடஜனங்கள் பகைத்தார்கள்; தவிரவும், சாஸ்திரப்பயிர்சியுள்ள மூர்ஸ் (Moors) ஜாதியார்களை வெறுத்தார்கள். இவ்விரண்டு காரணங்களால், கிறீஸ்துமதம், அறிவின் ஆதாரத்தின்மேல் நிற்காமல், சாதாரண ஜனங்களுடைய மூட நம்பிக்கையை ஆதாரமாகக்கொண்டது. ஞானவெளிச்சத்தைக்கண்டு மறைந்தது இக்காரணம் பற்றி அறிஞர்கள் கிறீஸ்துமதத்தில் நம்பிக்கையை விட்டார்கள். கிறீஸ்துமதம் செல்வாக்காயுள்ள காலத்தில், அம்மதத்தின் சித்தாந்தங்களில் அபிப்பிராய பேதத்திற்காக மனிதர்களை சிரைச்சாலையில் அடைக்கிறதும், கிட்டிபோட்டு ஹிம்ஸிக்கிறதும், நெருப்பில் போட்டுத் தபிப்பிக்கிறதும், இன்னும் பலவிதக்கொடுமைகளை,

அம்மதத்தின் துரபிமானமுள்ளவர்கள்செய்து வந்தார்கள். இக்கொடுமைகளின் ஞாபகம் இன்னும் சாஸ்திரக்ஞர்களின் மனத்தில் இருந்துகொண்டிருக்கிறபடியால், யாதேனும் ஒரு நூதனமான விஷயம், சாஸ்திர ஆராய்ச்சினால் கண்டுபிடிக்கப்பட்டு, அது கிறீஸ்துமதப் பாதிரிமார்களின் கொள்கைகளுக்கு விருத்தமாக இருக்குமாகில், அப்புது விஷயத்தை ஆதாரமாகக்கொண்டு, கிறீஸ்துமதக் கொள்கைகளின் அறிவின்மையைத்தூற்றிச்சின்னபின்னப் படுத்துவதில், சாஸ்திரக்ஞர்கள் அத்துவர்யூவாக இருக்கின்றார்கள். அத்தகையகொள்கைகள் அநேகம் சாஸ்திரிகளின்வாதக்குண்டுகளால்சிதரிச்சிதைந்துபோயின. சிலவைகள் முன்ஸ்வரூபம் முற்றும் மாற்றபெற்று, ஞானதத்துவங்களாக மாறியிருக்கின்றன; புஸ்தகங்களை ஆதாரமாகக்கொண்டிருந்த மதிமயக்கம் நீங்கிக்கொண்டுவருகிறது. ஞானிகளின் அந்தரனுபசித்தாந்தங்களுக்குக்கௌரவமும் மரியாதையும் ஏற்பட்டுக்கொண்டுவருகிறது. முன்நடைபெற்றுவந்த குருகிய அபிப்பிராயம் போய், அகண்ட ஞானமும் விரிந்த அபிப்பிராயமும் மேல்நாட்டில் இப்போதுதான் உண்டாகிக்கொண்டு வருகிறது.

௨. விஞ்ஞானப்பயிற்சி அபிவிருத்தியடைந்து ஜயம்

பெற்று இருக்கின்ற இக்காலத்தில், உலகத்தில் உள்ள எல்லா மதங்களும் ஆராய்ச்சி செய்யப்பெற்று, எம்மாத்திரம், அவைகள் அறிஞர்களால் அனுஷ்டிக்கத் தக்கவை என்றும், உலகத்தில் இனி நடைபெறத்தக்கவை என்றும், அதிக நாகரீகம் பெற்றவும், சாஸ்திர அபிஞ்ஞர்கள் அதிகமாகிக் கொண்டும்வருகின்ற ஜாதியார்களுக்குள் எம்மட்டில், இம் மதங்கள் முந்நின்று, ஜனங்களை ஞானமுறையில் நடத்தக் கூடுமென்றும், பலவிதமான கேள்விகள் பிறக்கின்றன. கிறிஸ்துமதமானது, மேல்நாட்டில் இவ்வாராய்ச்சி என்ற அக்கினியில் பிரவேசித்துப்புனிதமாகவேண்டும். கீழ்நாடுகளில், ஹிந்துமதம், பௌத்தமதம், மகமம்தியமதம், இவைகள் இத்தன்மையான, பரீக்ஷையான அக்கினியில் பிரவேசம் செய்துத்தேரிவரவேண்டும். மதசம்பந்தமான தத்துவங்கள் எப்போதும் அழியா. ஆனல் மதங்கள் அழியும். முன்னும் அழிந்திருக்கின்றன. இனியும் அவைகள் அழியும். மாறிக்கொண்டிருக்கும். காலதேச வர்த்தமானங்களுக்குத்தக்கவாறு, தாம் மாருமல், ஒரே பிடிவாதமாக நின்றுகொஞ்சமேனும் இளகாமல் இருக்கும் மதம் அழியும்; அதனல் அதன் உயிர்ப்பாகம் நீங்கிவிட்டதெனத்தெரியவரும். உயிருள்ளசரீரம் இடத்தை நோக்கி தன்னை மாற்றுக்கொள்ளுமல்லவா? மாற்ற இயலாமற்போனல், மரணதர்மம் வந்துவிட்டதென நினைக்கப்பாலது. அதனல், ஒவ்வொருமதத்

திற்கும் இந்தக்கேள்வி ஏற்பட்டு இருக்கிறது. அதற்கு சமாதானம் சொல்லுவதினுல், இன்னமதம் வருங்காலத்தில் நடைபெறும், இன்னமதம் நடைபெருது, என்று தீர்மானிக்கலாம். கேள்வி இதுவாம்:—இக்காலத்திய கதியையும் தர்மத்தையும் தயிரியமாக எதிர்த்து, அதை மேற்கொண்டு, தன்வசமாக்கி, அதை நல்வழிப்படுத்தி ஸ்வரூபடுத்தும் சக்தி தன்னிடம் இருக்கிறதா? இன்றேல், அஸிரியா, எகிப்த்து, கிரீக் தேசங்களில் வழங்கின, பெரிய மதங்கள் போன்று இம்மதங்களும் அழிந்துபோய், அவைகளின் சின்னங்கள்மாத்திரம் இருக்கின்றமைபோல, இப்போதியமதங்களின்கதி ஏற்படுமா? கிறீஸ்துமதம் காலதேசத்திற்குத்தக்கவாறு, தன்னை மாற்றிக்கொண்டு உயிருள்ளமதமாக அமைந்து இனி நடைபெறுமா? என்ற வினுவைப்பற்றி இப்போது நான் கவனிக்கவில்லை. அதைப்பற்றி நான் கவலை கொள்ளவில்லை. இப்போது 50, வருஷங்களாக அதிக சீக்கிரமாக அநேக மாறுதலை அம்மதம் பெற்றிருக்கின்றது; ரக்த பிரவாகத்திலுைம், நெருப்பினுலும், 1500 வருஷங்களாக நடைபெற்றுவந்த அக்கிறீஸ்துமதம் அக்கொடுமைகளைமுற்றும் மறந்து, மாறி முன்போல இல்லாமல், இனிமேல் நல்ல சுபாவம் பெற்று நடைபெறலாமே என்று, தோன்றுகிறது. ஆனுல், என்கவலை எல்லாம் ஹிந்துமதத்

தைப்பற்றியதாம். ஹிந்துமதம் இக்காலகத்திற்குத்தக்கபடி தன்னைச்சீர்படுத்திக்கொள்ளுமா? ஆயிரக்கணக்கான, ஏன் அப்படிக்குறைப்பான்? பதிணையிரக்கணக்கான வருஷங்களாக இருந்தமைபோல, இனிமேலும், அஃது இந்தியர்களின் தர்மமுறை நீதிமுறையை நடப்பித்துக்கொண்டு செலுத்தும் சக்தியுடைத்தானதா? இப்போது புதிதானச்சுபாவத்தை பெற்று இருக்கின்ற இந்தியருக்கு, அதாவது மேல்நாட்டுக் கல்விப்பயிற்சியைப்பெற்று, அதனால், படபட என்று துடித்துக்கொண்டிருக்கின்ற இந்தியருக்கு, ஞானிகள், தபிஸ்விக்கள், துறவிகள், தீரர்கள், போர்வீரர்கள், ஜனோபகாரிகள், இவர்களால் பூர்வகாலத்தில் மேன்மையையும் மஹிமையையும் பெற்ற ஹிந்துமதம் இனிமேலும் அவ்வுயர்நலம் உண்டாகும்படியாகச் செய்யற்பாலதா? ஹிந்துமதம் இதைச்செய்தல் கூடும் என்றும், இந்தியரின் மனத்தை நல்வழிப்படுத்தும் என்றும், அவர்களின் ஹிருதயத்தை ஆளும் என்றும், இந்தியரின் மனச்சக்தியை அபிவிருத்தி செய்யும் என்றும், காமக்குரோதாதிகளை தவிர்ததுத்தீரத் தன்மையை உண்டுபண்ணுவிக்கும் என்றும், எனக்குப்பூர்ண நம்பிக்கை உண்டு. அறிவை ஆதாரமாகக் கொண்டிருக்கின்ற ஹிந்துமதத்திற்கு அறிவின் பயற்சியினால், எதுவந்துவிடுமோ என்ற பயம் வேண்டாம். ஞானபாகத்தில், ஹிந்துமதம் ஆழ்ந்ததாகவிருக்கின்றமையால், என்ன ஞானபாவம்

எவ்வளவு ஆழமாக உண்டாயினும், அதற்கு ஏற்ப, ஞானம் அதின் கண் அதிககம்பீரமாகவேத் தோன்றுவதாகும். அறிவின் அபிவிருத்தியாலும், ஞானத்தின் செல்வாக்கு அதிகப்படுகிறதினலும், அம்மதத்திற்கு எவ்விதத்தினும் பயமே இல்லை. அம்மதம் இன்னும் நீடித்து இருக்குமென்பதைப் பற்றி நன்னம்பிக்கைமேன்மேலும் அதிகமாகிக்கொண்டே வருகிறது. இப்படி நாம் சொல்லுவதற்கு அதின் பூர்வ உபதேசங்களில் ஆதாரம் உண்டா என்று பார்ப்போம்.

3. ஸ்தூல சூக்ஷ்மலோகங்கள் உள்பட பலவாருன பிரபஞ்சத்தின் உண்மைகளை அறிந்த தத்துவஞானிகளான ரிஷிகளால் ஹிந்துமதம் ஏற்படுத்தப்பெற்றது. ஸ்தூலமான பூமி, என்ன, அதற்கு அப்பால் உள்ள, சூக்ஷ்மமான பூமிகள் என்ன, சப்தலோகங்கள் என்ன அவைகளின் கண் வஸிக்கின்றவர்கள் என்ன, இவைகளெல்லாம் அனுபவசித்தமாக பூர்ணம்பெற்ற அந்த ரிஷிகளுக்கு பிரத்தியக்ஷமாகத்தெரிந்தவைகள். சூக்ஷ்மதிருஷ்டியினல் தன்னுடைய சூக்ஷ்மசரீரத்தை உபாதியாகவைத்துக்கொண்டு இப்போது ஆராய்ச்சி செய்கிறவன் எவ்வண்ணம் விவரிப்பானே, அவ்வண்ணமாக, அந்தமஹாபுருஷர்களான ரிஷிகள், தங்கள் அனுபவங்களை விவரித்திருக்கின்றார்கள். அதனல் மற்றவர்கள்போல அதாவது, குறைவானபடி ஞானவிகாசம்பெற்ற ஏனையர்கள்போல,

அவர்கள் வார்த்தைகளில் தவரார். அவர்கள் வார்த்தைகள் உண்மையாகவே இருக்கும். பூமிஉண்டாகிப்பத்து லக்ஷக்கணக்கானவருஷகாலம்கழிந்தனவென்றும், அதின்மேல்மனிதர் உண்டாகிஏராளமானகாலம் ஆகிவிட்டது என்றும், பூமிசாஸ்திரம் (Geology) சித்தாந்தப்படுத்துகிறது. இது ஹிந்துமதசித்தாந்தத்தை கொஞ்சமேனும்அசைக்கமுடியாது. பூமிஉண்டாகி 6000 வருஷங்கள்தான் ஆயின என்று கிறீஸ்து பாதிரிமார்சொல்லுகிறஉபதேசத்திற்கு நேர்விரோதமாகவும், உண்மையாகவும், ஹிந்துமதம் உபதேசிக்கிறதாவது:— பத்து லக்ஷக்கணக்கான 4 யுகங்கள், 4320,000000 வருஷங்கள் அடங்கிய கல்பங்கள், என்ன, பிர்மசிருஷ்டிகாலமான, 311,040,000,000,000 வருஷங்கள் என்ன, இத்தன்மையான நீடித்ததீர்க்ககாலகதியைச்சொல்லுகிறது. இத்தன்மையான சித்தாந்தமிருக்கிறதினால், புதிதாகமேல்நாட்டார் கண்டுபிடித்ததாகச்சொல்லும் விஷயங்களால் ஹிந்துமதத்திற்கு எவ்விதச்சலனமும் ஏற்படாது. லார்டு கேல்வின் என்ற மேல்நாட்டுச்சாஸ்திரியார்—சூரியன் இன்னும் பத்துக்கோடி வருஷங்களுக்குத்தான் இருக்கும்—என்றார். ஹிந்துமத சித்தாந்தப்படி, சூரியன் பிரஹ்மாவின் ஒருபகல் காலம்வரை இருக்கும் என்பதாம். இஃது அம்மதத்தின் தத்துவஞானம்பெற்றஜ்ஜோதிஷசாஸ்திரிகளால் நிர்ணயப்படுத்திய காலம்; இதைமாற்ற ஹிந்துக்கள் சம்மதித்தார்களில்லை.

இப்போது அதிக ஆராய்ச்சியின்மீது சூரியனின் ஜீவகாலம் முன் லார்டு கேல்வின் என்பார் கணித்தகால அளவை 10 மடங்குப்பெருக்கினுல் ஏற்படும் காலம், என்கிறார்கள். அறிவில்லாதமூடர்கள், ஹிந்துமதத்தின் கால சித்தாந்தத்தை ஒருகாலத்தில் பரியாசம் செய்தார்கள். அதுதான்சரியென்று இப்போது உறுதிபடுத்தப்பெறுகிறது. உலகத்தில் அறிவு அதிகமாக, பரியாசம்செய்தவர்களே ஹிந்துமதம் எதிர்நோக்கி தாக்குகின்றதுபோலும்.

---

## 10-ம் அதிகாரம்.

:o:

### ஹிந்துமதம் சாஸ்திரத்திற்கும் யுக்திக்கும் ஒற்றுமையானது.

---

(முன்தொடர்ச்சி).

1. 19-ம் நூற்றாண்டின் கடைசியான காலத்திய மேல்நாட்டு சாஸ்திரத்தின் சித்தாந்தம் என்னவென்றால், ஆத்ம தத்துவ நூலானது (Psychology) பிராணி தர்மசாஸ்திரத்தை (Physiology) ஆதாரமாக உடைத்தது என்பதாம்; மேனாட்டு சாஸ்திர அபிஞ்ஞர்களின் அபிப்பிராயப்படி, சிந்தனையும், பிராணனும், பிரகிருதி திரவியங்களின் ஒருவித

அமைப்பின் காரியமாம்; அதினால் பிராணன் இருத்தலா னது அதற்குரிய பிரகிருதி திரவியங்களின் நிலைமையைப்ப ற்றியதாம். "பித்தாசயமானது, பித்தநீரை எவ்விதம் உண் டுபண்ணுகிறதோ, அவ்விதமாக, மூளையானது சிந்தனையை உண்டுபண்ணுகிறது" என்பது கார்ல் வோக்ட்டு (Karl Vogt) என்பாரின் கொள்கை. "பிராணனுக்கு ஒரு உற் பத்தி உண்டு என்று ஒப்புக்கொள்ளும் பிராணி தர்மசாஸ் திரி ஒவ்வொருவனும் பிரகிருதியின் அணுத்திரள்களினால் இயல்பாக ஏற்படுகிற ரசாயன சக்தி விசேஷம்தான், பிரா ணன் அல்லது உயிர் என்று அபிப்பிராயம் கொள்ளவேண் டும்'' என்று வர்ச்சோ (Virchow) என்பார் சொல்லுகிறார். பிராணனானது ஜீவித்திருக்கின்ற சரீரத்தின்கண்ணுள்ள, எலும்பு, தோல், நிணம் முதலியவைகளின் காரியமுமன்று; பலவிதமான கரணங்களின் கூட்டுத்தொழிலின் காரியமும ன்று; ஆனால் பிராணன், (Protoplasm) புரோடோபிளாஸம் என்று சொல்லப்படுகிற ஒரு திரவியத்தின் சம்பந்தத்தால் ஏற்பட்டுள்ளது; அந்த திரவியம் பிரகிருதி அணுக்களின் கண்ணுள்ள ரசாயன சக்தியின் காரியமாக உண்டாகிறது; அந்த திரவியம் (Nitrogen) நைட்ரோஜன் என்னும் ஆவி யும் சுத்தக்கரியும் (Carbon) சேர்ந்த நெகிழ்ந்த பதார்த் தம். இவ்விதம் ஹேக்கல் (Haeckel) என்பார் சொல்லுகி றார். பிராணன் உற்பத்தி முறையில் மூன்றுவிதமான

அபிப்பிராயங்கள் இருக்கின்றன என்பது வெளியாகிறது. (1) எலும்பு தோல் சதை நிணம் முதலியவைகளின் சேர்க்கையின் காரியம் உயிர் என்பார் ஒருவர். (2) கருவிகரணங்களின் கூட்டுரவும் அவைகளின் கூட்டுத்தொழிலும் உயிருக்குக்காரணம் என்பார் மற்றொருவர். (3) அவை இரண்டும் சரியன்று ஆனால் புரோடோ பிளாஸத்தினின்றுதான் பிராணன் உண்டாகிறது என்கிறார் ஹேக்கல் என்பார். சைதன்னியமாகின்ற ஆத்மாவினின்று, பிராணன் வெளிப்பட்டதாகவும், சூக்ஷ்மமான லோகங்களுடன் மனிதன் சம்பந்திக்கிறான் என்றும், இவர்களில் ஒருவரும் சொன்னாரில்லை. அந்நினைப்பைச் சொப்பனத்திலும் நினைத்தார் இல்லை. இவ்விஷயத்தைப்பற்றி நீடித்தவாதம் செய்தமேல், புக்கினர் (Buchner) என்பார் சொல்லுகிறதாவது.—"நாம் பார்க்கவேண்டும் என்று நமக்குக் கண்கள் உண்டாகவில்லை. நாம் நடக்கவேண்டும் என்று நமக்குக் கால்கள் உண்டாகவில்லை. கண்கள் இருக்கின்றன, அதனால் பார்க்கிறோம். கால்கள் இருக்கின்றன, அதனால் நாம் நடக்கிறோம். கருவிகரணம் உண்டாவதற்குக் காரணம் தொழில் அன்று. ஆனால், தொழிலுக்குக் கருவிகரணம் காரணமாம். மறுபடியும் சொல்லுகிறார் "மனது மூளையின்பல தொழில்களையும், கருவிகரணங்களின் பலதொழில்களையும் ஒருங்கு

சேர்த்துப் பொதுவாகக்குறிப்பிடும் ஒரு பொதுச்சொல். அவைகளைவிடத் தனியாக மனது என்று வேறுவஸ்துக் கிடையாது. சுவாசம் விடுதல் என்பது சுவாசாசயம் முதலிய கரணங்களின் தொழில்களைக் குறிப்பிடும்சொல்; ஜிரணித்தல் என்பது ஜீரணம் செய்யும் கருவிகரணங் களின் பல தொழிலைக் குறிக்கும் ஒரு பொதுச்சொல்; அம்மாதிரியாம் மனது என்ற சொல்லும், வேறன்று. இவர் அபிப்பிராயத்தில் "மூளையானது மற்ற கரணங்களைவிட மிக உயர்வானது, முக்கியமானது; பிரகிருதி திரவியங்களின் அமைப்புக்களின் மஹா உயர்வான அமைப்பு மூளை என்ப தாம். மூளையை அவயவமாக உபயோகிக்கிற அவயவியான ஆத்மா என்றபாவம் முற்றும் இவரால் தவிர்க்கப்படுகி றது. சித்தம் என்றால், வெளியில் உண்டாகும் விஷயங் களினால், மூளையில் இருக்கின்ற ஒரு சிறு அறை (Cell)க் கும் மற்றொரு அறைக்கும் நேரிடும் ஒரு சலனத்தைத் தவி ர வேறன்று. எண்ணம் அல்லது சங்கற்பம், மூளையினால் உண்டுபண்ணப்படும் காரியம். மூளை திரவியத்தின் காரிய ம் அல்லது தொழில்தான் மனச்சங்கற்பம், அல்லதுச் சிந் தனை." இத்தகைய அபிப்பிராயங்களை இனி அதிகமாக சொல்லுவானேன். 19-ம் நூற்றாண்டின் மேற்றிசையாரின் புலனறிவு சாஸ்திரத்தின் சித்தாந்தமாவது, "மனிதன் ஏன்

ருல் ஸ்தூலசரீரமாம். அதன்கண் ஆத்மா ஒன்று உள்ளது என்று சொல்லுதல் அறிவின்மையாம்.”

2. ஹிந்துமதத்தின் கொள்கைகளும் சித்தாந்தகளும் பிரகிருத பிரஸ்தாபித்தவைகளுக்கு முற்றும் விரோதமாம். புலனறிவு சாஸ்திரங்களினால் ஏற்பட்டுள்ள விஷயங்களை ஒப்புக்கொண்டு, ஹிந்துமதமானது வேறுவிதமான அபிப்பிராயத்தை சித்தாந்தப்படுத்துகிறது. ஹிந்துமதத்தின் கொள்கை இதுவாம். என்றும் உள்ள ஒரு சத்தியமான வஸ்து உளது அது காலத்திற்கும் தேசத்திற்கும் உட்பட்டு விகசிக்கும் சமயத்தில் மிதுனமாக (இரட்டையாகவே) வெளிப்படுகிறது.— சத், அசத், என்றும், ஸம்பூதம் அஸம்பூதம், என்றும், ஆத்மா அநாத்மா என்றும், பிரத்தியக் ஆத்மா மூலப் பிரகிருதி என்றும், ஈசுவரன் மாயை என்றும், உயிர் உடல் என்றும், புருஷன் பிரகிருதி என்றும், இவ்விதமாகத் தோன்றுகிறது. வியக்தமாகுங்காலத்தில், இவைகளில் ஒன்று இல்லாமல், மற்றொன்றுமாத்திரம் தனிமையாகத் தோன்ருது, இவை ஒன்று இன்றி அமையாத இரட்டை. அந்தர்முகமாகப்பார்க்கில் ஆத்மாவாம், பகிர்முகமாகப் பார்க்கில் அநாத்மாவாம். ஆத்மா உண்டென்று வைத்துக்கொண்டால் தான், அநாத்மா உண்டு என்று ஹிந்துமதத்தில், ஏற்படும்.

பிராணன் ரூபப்படுத்துகிறவன், நியந்தா, நடத்துகிறவன், ஏவல்செய்கிறவன்; சரீரம் ஜடம், ரூபப்படுத்தப்படும் பொருள். ஏவலுக்குள்பட்டவன், நடத்தப்படுகிறவன், வேலைக்காரன். சரீரம்பிரகிருதி திரவியங்களினால் ஆகிய அமைப்பு, நமது மதக்கொள்கைப்படி ஜீவன் தன்னிடம் உள்ள சக்திகளில் ஒன்றை வெளிப்படுத்தி உபயோகமாக்கிக்கொள்ள, ஒரு கருவியை அல்லது ஒரு கரணத்தை ரூபப்படுத்திக்கொள்ளுகிறான். ரூபங்களைப்பார்க்க விரும்புகிறான், அல்லது முயற்சிக்கிறான், ரூப இந்திரியம் அதாவது கண் உண்டாகிறது. ரூபங்களை நகற்ற முயற்சிக்கிறான், நடைக்கு உரிய இந்திரியம் அதாவது கால் உண்டாகிறது. தொழில் கருவிகரணத்தை உண்டுபண்ணுகிறது, கருவிகரணம் தொழிலின் காரியம். தொழில் கருவியின் காரியமன்று. புக்கினர் என்பாரின் அபிப்பிராயம் இதற்கு நேர் எதிரானது. நேர் விரோதமான இவ்விரண்டு அபிப்பிராயங்களுக்கும் பொருத்தமும் சமாதானமும் ஏற்படாது. நேர் எதிரிடையான இரண்டு அபிப்பிராயங்கள் நிகழ்கின்றன. இரண்டில் ஒன்று பிசகாகத்தான் இருக்கவேண்டும். இவைகளிரண்டில் எது சரி? இதுதான் கேள்வி.

3. மேனாட்டுச்சாஸ்திரிகளால் நடத்தப்பெற்றப் பரீக்ஷைகளினாலேயே, இக்கேள்வியின் சமாதானம் ஏற்படு

கிறது. வரவர தீர்க்கமான ஒலியுடனே இக்கேள்வியின் உத்தரம் அடியில்வருமாறு தொனிக்கிறது. "ஹிந்துமத அபிப்பிராயம்சரி." பரீக்ஷைக்குப்பிறகு, இப்போதிய 20-ம் நூற்றாண்டின் சாஸ்திர அபிஞ்ஞர்களின் நடத்தை முன்னிருந்ததற்கு முற்றும் மாறாகயிருக்கிறது.

4. (Monera) மோனீரா என்று பெயருள்ள நுண்ணியகிருமிகள், ஸ்தாவரங்களையும், சேர்ந்தவையல்ல; ஜங்கமங்களையும் சேர்ந்தவையல்ல; ஸ்தாவரஜங்கமங்களுக்கு மூலமான ஜீவராசிகளென்று மதிக்கலாகும். இவைகளைப் பூதக்கண்ணாடியால் பரீக்ஷைசெய்ததில், கருவிகரணங்களில்லாத நுண்ணியஜீவப்பிண்டங்கள்; இவைகளுக்கு வாயில்லை; ஜீரணம்செய்யும் குழாயில்லை; ஸ்வாசம்விட ஸ்வாசாசயமில்லை; ஹிருதயமில்லை. அவைகள் சிறு உயிருள்ள துண்டுகள். பிராணனுள்ளவைகளென்றுமாத்திரம் சொல்லலாம். பிராணச்சேஷ்டைகள் உள்ளன. சேஷ்டைகளுக்குத்தனித்தனியானகருவிகரணம் ஏற்படவில்லை. அந்தப்பிராணிக்கு உணவு தேவையானால், அதன்வெளிச்சரீரத்தின் ஒருபாகம் தற்காலத்திற்கு வாயாக அமைகிறது; ஒருபாகம் உண்ண உணவு சம்பாதிக்கும்; மற்றொருபாகம் ஜீர்ணிக்கும்கருவியாக அமைகிறது; அது காற்றைவேண்டுகிறது. அதன்சரீரத்தின் மேல்பரப்புமுழுமையும், காற்றை உட்கொள்ளுகிறது; உட்

கொண்டகாற்று சரீரம் முழுமையும் பரவுகிறது; உட்கொண்ட உணவைத்தன்மயப்படுத்த அந்தப்பிராணிமுயலுகிறது. அவ்வுணவு சரீரம் முழுமையும்பரவி, சரீரத்தை போஷிக்கிறது. அது சலனிக்கவேண்டுகிறது; சரீரத்தின் ஒருபாகம் வெளியில் பிதுங்கிவருகிறது. அது தற்காலத்திறகு நடக்கும் காலாக அமைகிறது. அத்தொழில் முடிந்தவுடனே, வெளியில் பிதுங்கிவந்தபாகம் உள்ளே புகுந்து ஒன்றாக ஆகிறது.

5. இத்தன்மையான பரீக்ஷைகளினாலும், ஆராய்ச்சியினாலும் அடியிற்கண்ட தர்மம் ஏற்படுகிறது. உணவு அடிக்கடி வேண்டுவதால் அடிக்கடி உணவு உட்கொள்ளப்படுகிறது. இத்தொழில் அடிக்கடி நடத்தப்படுகிறது. இதன்காரியமாக, இந்தப்பிராணியின் சரீரத்தில் ஒருபள்ளம் முதலில்ஏற்படுகிறது; பின்பு உட்பாகத்தில், ஒருசிறு ஜீரணக்குழாயும், அந்தக்குழாய் வெளியிலும் துறக்கிறது. அந்தத்துறந்தபாகம் வாயாகவும் பின்பு அமைகிறது. இவ்விதமாய் ஜீரணக்கருவியும், உணவை உட்கொள்ளும் கருவியான வாயும், உண்டாகின்றன. பிராணி தன் தொழில்களை செய்யமுயற்சித்துக்கொண்டுவர, அதன் காரியமாக கருவிகரணங்கள் உண்டாகின்றன. இவ்விதமாகவே சுவாசப்பைகள் தோன்றுகின்றன. அவைகள் சுவாசாசயமாக ஏற்

படுகின்றன. மற்றொருபாகம்குருகியும், விரிந்தும், அடிக்கடி சலனித்துவர, கடைமுறையில் அது ஹிருதயமாக அமைகிறது. நடக்கிறதற்கு அடிக்கடி வெளியில் பிதுங்கிவந்த பாகம், கடைசியில், காலாக அமைகிறது.

6. இதனால் என்ன தெரியவருகிறது? உள்ளே இயங்குகின்ற ஜீவன் பலதொழில்களைச்செய்ய விரும்புகிறது; அவ்விருப்பம் நிறைவேற, முயற்சிக்கிறது; அம்முயற்சியால், பிரகிருதிதிரவியத்தை பல கருவிகரணங்களாக நாளாவட்டத்தில், ரூபப்படுத்தி அமைத்துக்கொள்ளுகிறது. ஆகவே, தொழிலின் காரியமாகக் கருவிகரணங்கள் உண்டாகின்றன அல்லவா? தொழிலின் காரணம் கருவிகரணங்கள் அல்ல என்றே வெளியாகும். சிலசமயங்களில், சரியான கருவிகரணம் ஏற்படாததின் நிமித்தம், ஜீவன் தன்னுடைய தொழிலைக் கொண்டுசெலுத்த சிரமப்படுகிறான். தொழில்செய்யாத யாதொருகருவியும், கரணமும் நாம் கண்டோமில்லை. (ஆனால் முன் வேலைசெய்து, அவ்வேலை, இப்போது அவசியமின்மையால், அதனால் தொழில்லாத சில கருவிகரணங்களின் பூர்வச்சின்னங்களைப் பார்க்கலாம். இது நாம்ஸ்தாபிக்கும் சித்தாந்தத்திற்கு விரோதமாகமாட்டாது.) உள்ளே இயங்குகின்ற பிராணன், தொழிலைச்

செய்யமுயன்று தன் உபாதியான சரீரத்தில் பல இடத்தில் மோதிமோதி, தொழில் நன்றாய் செய்யப்படுமாறு, கருவி கரணங்களை செய்வித்துக்கொள்ளுகின்றது. இவ்விதமாக சாந்தோக்கிய உபநிஷத்திலும் உபதேசித் திருக்கின்றது. ஆத்மா "ஸ்தூலமான பிராகிருதபூமியில், பார்க்கவும், கேட்கவும், நினைக்கவும், விரும்புகிறான்; அதினால் கண், காது, மனது, என்ற கரணங்களை உண்டுபண்ணிக் கொள்ளுகிறான்."

7. தொழிலுக்கும், கருவிகரணங்களுக்கும், உள்ள சம்மந்தமுறை இஃது என்று கம்பீரமாக ஹிந்துமதசாஸ்திரம் வியக்தமாக உபதேசிக்கின்றது. இவ்வுபதேசத்தின் ஆதாரத்தை வைத்துக்கொண்டு மூளைக்கும், சிந்தைக்கும் உள்ள சம்பந்தத்தை இனி விசாரிப்போம்.

---

## 11-ம் அதிகாரம்.

:o:

### ஹிந்துமதம்—சாஸ்திரத்திற்கும் யுக்திக்கும் ஒற்றுமையாக இருக்கிறது.

---

(முன் தொடர்ச்சி.)

1. பிராணன், தன்னிடம் அடங்கியிருக்கும் சக்திகள் ஒன்றை வெளிப்படுத்தும்முறையில், உற்ற கருவிகர

ணங்களை ரூபப்படுத்தி உண்டுபண்ணிக் கொள்ளுகிறது. பின்னர் அக்கருவிகரணம் ஏற்பட்டமேல், அவைமூலமாக முன்னர்விட இலகுவாகவும், செம்மையாகவும், அச்சக்திகள் விளங்குகின்றன இது உண்மையான தர்மம. சிந்தனை எண்ணம், சங்கற்பம், இவைகளுக்கும் மூளைக்கும் உள்ள சமபந்தமும், பிராணனுக்கும் அதன் கருவிகரணங்களுக்கும் உள்ள சம்பந்தம்போன்றதாம். மூளை சிந்தனையையும் அல்லது எண்ணத்தையும் உண்டுபண்ணுகிறதில்லை. ஆனால், சிந்தனை, எண்ணம், சங்கற்பம், இவை மூளையை உண்டுபண்ணுகின்றன; உருவப்படுத்துகின்றன. எவ்விடத்தில் ஆராய்ச்சி நிகழ்ந்தாலும், தொழில் கருவியை ரூபப்படுத்தி உண்டுபண்ணுகிறது. அக்கருவி அபிவிருத்தியடையும்படிசெய்கிறது. இந்த உண்மையை மூளை சமபந்தத்திலும் அறிவோம்.

2. சுயப்பிரஞ்ஞையில்லாமல், பரவசமாய் மயங்கி மூர்ச்சித்தார்போல ஒருவன் இருக்கின்றநிலைமையில், அவன் மனோபாவங்களும் சிந்தனைகளும் அதிகவேகமாகவும் துடிப்பாகவும் இருக்கின்றதை பரீக்ஷையினால், சாஸ்திரஞ்ஞர்கள் ஆராய்ச்சிபண்ணிச் சித்தாந்தப்படுத்தியிருக்கின்றார்கள். இதனால், சிந்தனை மூளையை உண்டுபண்ணி ரூபப்படுத்துகிறதேயன்றி, சிந்தனையை மூளை உண்டுபண்ணுகிறதில்லை

என்ற அபிப்பிராயம் ஏற்படுகிறது. பரவசமாக்கும் உபாய மும் (Mesmerism) மயக்கம் உண்டுபண்ணும் உபாயமும் (Hypnotism) மேற்கண்டபரீக்ஷைக்குச்சாதகமாம். இவை இரண்டையும், பொய்யென்றும், மோசமானவையென்று புக்னர் என்பார் தவிர்த்துவிட்டார் என்பது கவனிக்கத்தக்கது. இப்பரீக்ஷைகள் வாஸ்தவமென்று ஏற்பட்டால், தாம்கொண்ட அபிப்பிராயமானது (அதாவது பிரகிருதிதான் எல்லாவல்லமை உள்ளது, எல்லாவற்றுக்கும் காரணம்.) அடியோடே அற்றுப்போம் என்று நன்ருய் அறிந்துகொண்டார். அதினுல்தான் இத்தகையப்பரீக்ஷைகளைப் பலமாக நிந்தித்தார். கொஞ்சமேனும் இப்பரீக்ஷையை மனத்தில் வாங்கிக்கெண்டாரில்லை. மயக்கம் உண்டுபண்ணும் உபாயத்தினுல் (Hypnotism) பரவசமாகி ஒருவன்பிரஞ்ஞைதப்பியிருக்கும் நிலையில், சரீரம் ஒருவித சலனமில்லாமல், பிணம் போல கிடக்கும்; ஹிருதயம் சலிக்காமலும், உஸ்சுவாஸம் நிஸ்சுவாஸமின்றி மூச்சு இல்லாமலும், இந்திரியங்கள் அததற்குரிய வேலைகளைச்செய்யாமலும், இருக்கும். சோர்வினுல் மூர்ச்சைப்போட்டவன்போல் இருப்பான். வெளி வியாபாரங்கள் ஒன்றும் அவனைப்பாதிக்காவாம். இரத்த ஓட்டம் இல்லாமையாலும், அசுத்தஇரத்தம் காற்றினுல் சுத்தப்படுத்தப்படாமலிருக்கின்றமையாலும், மூளையும் மயக்கத்துக்குள்ளாகி ஓய்வையடைகிறது. இந்த ஸ்திதியில்,

கண்மூடியும், நூற்றுக்கணக்கான மயிலுக்கு அப்பால் நிகழ்கின்ற சம்பவங்களை அவன் பார்க்கிறான்; கர்ண இந்தியம் மயங்கியிருந்தும், தூரத்தில்நடக்கும் சம்பாஷணையைக் கேட்கிறான்; ஜாகிருதகாலத்தில் அவனுக்கிருந்த ஸ்மரணையைவிட எத்தனையோமடங்கு அதிகமான ஸ்மரணை உள்ளவனாய், தான் குழந்தையாக இருந்தகாலம் முதற்கொண்டு, நேர்ந்த நுணுக்கமான விஷயங்கள் சம்பவங்கள் எல்லாம் திரும்ப விவரமாய்ச் சொல்லுகிறான். புத்தி முன்னைவிட அதிக சூக்ஷ்மமாகக்காணப்படுகிறது. மூளை எவ்விதச் சலனமும் இன்றி இருக்கின்றது, என்பதை கவனிக்கவேண்டும். கற்பனாசக்தி, மூளையின் உதவியின்றி இருக்கின்ற நிலையில், மஹா கம்பீரமாகப் பிரகாசிக்கின்றது. ஒவ்வொருசக்தியும் குறைவுபடாமல் அபிவிருத்தியடைகின்றது, இவைகள் எல்லாம் மூளையின் காரிய மென்று இருக்கும் பக்ஷத்தில், மூளை சோர்வுபடவே, அதன் சக்திகளாகிய தொழில்களும் சோர்வுபடவேண்டுமல்லவா? அப்படியில்லாமல் மூளையென்ற ஜயிலினின்று விடுபடவே முன்னைவிட, அதிக வியக்தமாகவும், மிகத்தீவிரமாகவும், நனி விசாலித்ததாகவும், அகலமாகப் பரவினதாகவும், மனோபாவங்களும் சக்திகளும் விளங்குகின்றன. சாஸ்திரப்பரிக்ஷையினால் சிந்தனையும், சங்கற்பமும் மூளையைப் பொருத்த

தன்று என்றும், அதனுல் உண்டுபண்ணப்படவில்லை என்றும் ஜயபேரிகை முழக்கம்போல ஸித்தாந்தம் ஏற்படுகிறது. புக்னர் என்பார் மோசம் என்று நிந்தித்த, மயக்கம் உண்டுபண்ணும் உபாயமுறை (Hypnotism), அறிஞர் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. இவ்விதமாக சென்ற 25 ஆண்டுகளுக்குள் அறிவுள்ள அபிப்பிராயம் விருத்தியடைந்திருக்கிறது.

3 இன்னும் ஒருவழியானும், சிந்தனை மூளையை உண்டுபண்ணுகிறதும், அபிவிருத்தி அடையச்செய்கிறதும், என்ற கித்தாந்தம் ஏற்படுகிறது. சிந்தனையானது மூளையின் கண்ணுள்ள சிறு அறைகளைப் பெரிதாக ஆக்கியும், பலவிதமாய்ப்பின்னியும், சிக்குப்படுத்தியும், செய்து வரும் தன்மை உடையது. ஹிந்துமதத்தில், யோகம் என்ற முறையில், அதன் அப்பியாசிகளுக்கு, உணவின் நியமம், ஸ்திரமான தியானம், ஏகாக்கிரச்சிந்தை முதலியன, முக்கியமானவைகளென்றும், அவ்வப்பியாசத்தினுல் சூக்ஷ்மலோகத்தினின்று பிரஞ்ஞா அலைகள் மூளையில் மோதும் சமயத்தில், அம்மூளை அவ்வலைகளை கிரகிக்கும் தகைமையைப் பெரும்படியாக ஏற்படுகிறது என்றும், உபதேசங்கள் உள்ளன. மேல்நாட்டில், ஞானிகளின் பரவசமான களிப்பு நிலைமைக்கும் (Eccstasy), அவர்களின் தேக பலஹீனத்திற்கும், உள்ள சம்பந்தமும், மதவிஷயங்களில்

அதிகமாகவும் தீவிரமாகவும் பற்றுள்ள மனிதர்களின் மனச்சுபாவம் ஒப்புரவின்றி நிலையற்றவிதமாயிருக்கும் தன்மையும், வரப்பிரசாதம் பெற்ற விவேகியின் மனத்தடுமாற்றமும், சாதாரண அறிஞ்ஞர்களுக்குள் ஒரு பயத்தை உண்டுபண்ணியிருக்கின்றன. இத்தகைய நிலைமையை உண்டுபண்ணும் விஷயங்கள் பிரஞ்ஞையை கெடுக்கின்றன என்று அபிப்பிராயப்படுகிறார்கள். சூக்ஷ்மமான பிரகிருதி திரவியங்களின் பலமானவும் நுண்ணியவையுமான அலைகள், ஏற்கனவே நேர்மைப்படுத்தப்படாத மூளையில் தாக்கவே, அதை பேதித்து, அதன் இயற்கையான தர்மத்தைக் கெடுத்து, புத்தியைத் தடுமாறும்படி, செய்வித்து அம்மூளையுடையானை பித்தன்போல் நடைபெறும்படி, செய்விக்கின்றன. யோகியானவன், தியான அப்பியாசத்தினால் அத்தன்மையான அலைகள்வந்து தாக்குதலைப்பொருத்து அங்கீகரிக்கும்படியாக, தன் மூளையை ஆயத்தப்படுத்துகிறான். தபசினால் நேர்மையான சம்ஸ்காரத்தை தன் மூளைக்கு உண்டுபண்ணுகிறான். சிந்தனைக்கருவியான மூளையை, சரியான சிந்தனையினால் ரூபப்படுத்தியும், நேர்மைப்படுத்தியும், அதிக நுட்பமான தொழில் செய்யும்படியானதாக, அம்மூளையைச் சீர்ப்படுத்துகிறான். யோகமார்க்கம் ஒன்றின்மூலமாய்த்தான் அசாதாரணமான சம்பவங்களையும்,

அநுபவங்களேயும், சாதாரணமானவை என்று கிரகிக்கும்படியாகுமென்றும், பிரஞ்ஞையும் அறிவும் தப்பாமல், ஞானப்பயிற்ச்சியும் ஞானமலர்ச்சியும் கூடுமென்றும், மேல்நாட்டார் இனித்தெரிந்துகொள்ளுவார்கள்.

## 12-ம் அதிகாரம்.

### ஹிந்துமதம்—சாஸ்திரத்திற்கும், யுக்திக்கும் ஒற்றுமையாக இருக்கிறது.

1. மனிதனுடைய சரீர அமைப்பைப்பற்றி ஹிந்து மதத்தின் சித்தாந்தம் என்ன? சுருங்கச்சொல்லில் இது வாம். ஜீவாத்மா ஒன்றின்பின் ஒன்ருய் ஸூக்ஷ்மஸ்தூல சரீரங்களே அதாவது கோசங்களே அங்கியாக தரித்துக் கொள்ளுகிருன். இக்கோசங்கள் முன்னதைவிடப்பின்னது அதிக ஸ்தூலமான திரவியங்கள் அமையப்பெற்று இருக்கின்றன. அந்தந்தக்கோசங்களின் பிரகிருதி திரவியங்கள் ஓரோர் பூமியைப்பற்றியதாய் இருக்கின்றன. மனிதனுடையப்பிரகிருத விகாசமுறை சம்மந்தமாக, ஐந்து பூமிகள் (Planes of Consciousness) உண்டு. ஆனல் சாதாரண மனிதன் மூன்று பூமிகளுடன் மாத்திரம் பிரகிருதத்

தில் சம்மந்திக்கிறான். அதனால் சாதாரண மனுஷனுக்கு திருலோகி என்று பெயர். அறிவில் முதிர்ச்சியடைந்தவர்களான ஞானிகளும், இன்னும் அசாதாரணமான சக்தி பெற்றவர்களும், மூன்றுக்கு மேலாக உள்ள மற்ற பூமிகளுடனும் சம்மந்திக்கிறார்கள்.

2. பூலோகமானது ஸ்தூலப்பிரகிருதி திரவியங்களால் அமைக்கப்பட்டிருக்கிறது. சாக்ஷாத் பூமி மஹா ஸ்தூலமான அடர்ந்த அணுக்களால் அமைக்கப்பட்டிருக்கிறது. அதைவிட லேசான திரவியங்களால் அமைந்த குவாயுவானது (atmosphere) பூமியைச்சுற்றிக்கவசம்போல இருக்கிறது. அதைவிட சூக்ஷ்மமான திரவியங்களால் அமைந்திருக்கிற ஆகாசமானது பூமி, குவாயு, இவைகளுக்கு உள்ளும் புறமுமாகப்பரவியிருக்கிறது. ஸ்தூலப்பிரகிருதியால் ஆகிய இரண்டு சரீரங்கள் இருக்கின்றன. ஒன்று, கெட்டியான திரவியங்கள், நெகிழ்ச்சியான திரவியங்கள், ஆவிகள் இவைகளால் அமைந்திருக்கின்றது; மற்றொன்று ஆகாச திரவியங்களால் அமைந்திருக்கிறது.

3. புவர்லோகம் பூமியைவிட சூக்ஷ்மமான திரவியத்தால் அமைந்திருக்கிறது. சிலசமயத்தில் இதை சூக்ஷ்ம லோகமென்றும், நக்ஷத்திரப்பிரகாசம் போன்ற திரவியங்

களால் அமைந்திருக்கின்றபடியால், நக்ஷத்திரலோகமென்றும், சொல்லுகிறதுண்டு. இந்த புவர்லோகத்திலும், கெட்டியான திரவியங்கள், நெகழ்ச்சியான திரவியங்கள், ஆவிமயமான திரவியங்கள், ஆகாசம்போன்ற திரவியங்கள், இருக்கின்றன. இந்தலோகத்திலுள்ள வஸ்துக்கள் இத்தன்மையான திரவியங்களால், அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த லோக சம்பந்தமான திரவியங்களால் அமைந்த ஒரு கோசம் நம்மிடத்திலிருக்கிறது. நாம் பூமியின்கண் இருக்கும்போது அது ஒரு சரீரமாக இருப்பினும், மரணத்தின் பிறகு, இரண்டு சரீரங்களாகப்பிறிகிறது. ஒன்று புவர்லோகத்தின் அதிக ஸ்துலமான திரவியங்களால் அமைந்திருக்கிறது, அதற்குப் பிரேத சரீரமென்று பெயர்; சூக்ஷ்மமான திரவியங்களால் அமைந்தது மற்றொன்று, அதற்குப்பிதிர் சரீரமென்று பெயர்.

4. மூன்றும் பூமி சுவர்க்க லோகம். புவர்லோகத் திரவியத்தைவிட அதிக நுண்ணியதான திரவியங்களால் இஃது அமைந்திருக்கிறது. இதற்குமானசிகலோகம்என்றும் பெயர். அதிலுள்ள வஸ்துக்களும், அதில் வசிக்கின்றவர்களின் சரீரங்களும் அமையப்பெற்று இருக்கிறதிரவியங்கள், கெட்டியானவை, நெகிழ்ச்சியானவை, ஆவிமயமானவை, ஆகாசம்போன்றவை, என்றபடிகளாக இருக்

கின்றன. மானசிகத்திரவியங்களால் அமைந்த இரண்டு கோசங்கள் நம்மிடம் இருக்கின்றன. சாதாரணமான ஜனங்கள் போகும் சுவர்கலோகத்தின்கண் உள்ள மானசிகத்திரவியங்களால் அமைந்தகோசம் ஒன்று, மஹர்லோகத்தின் சூக்ஷ்மமானத்திரவியங்களால் அமைந்த கோசம் மற்ருென்று. இரண்டாவதான கோசம் மஹாபுத்திமான்கள், ஞானிகள், இவர்களிடத்தில் தொழில் செய்கிறது. இவர்கள் நீங்கலாக, சாதாரணமான ஜனங்களிடத்தில் யாதொரு தொழிலும் புரியாமல் மந்தமாக இருக்கிறது. அதனுல் இதைப்பற்றி விஸ்தாரமான பிரஸ்தாபம் இப்போது வேண்டாம்.

5. மேற்கண்ட, பூ, புவர், சுவர்க்கம் என்ற லோகங்களில், பிரஜைகள் இருக்கின்ருர்கள். நம்முடைய பூமியில், நாம், மற்ற ஜனங்கள், பிராணிகள் முதலியன வசிக்கின்ருேம். பூமிபோலவே, புவர்லோகத்திலும் வசிக்கின்றவர்கள் உண்டு. பலபடிகளான தேவர்கள், அசுரர்கள் இருக்கின்ருர்கள். அதின் ஒருபாகமாகிய பிரேத லோகத்தில் பிரேதக்கூட்டங்கள் இருக்கின்றன. மற்றெரு பாகமாகிய பிதிர்லோகத்தில் பிதிர்க்கூட்டங்கள் இருக்கின்ருர்கள். மேலும் மனிதர்கள், தங்கள் ஸ்தூலசரீரம் நித்திரை செய்யுங்காலத்தில், புவர் லோகத்திற்குப் போகின்ருர்கள்;

ஆனால் இப்படிப்போகின்றவர்களில் சிலர்தான் அவ்வனுபவப்பிரஞ்ஞையுள்ளவர்கள். அதாவது அவ்வனுபவத்தை நினைப்புக்குக்கொண்டுவருகின்றார்கள். இன்னும் பலவிதமான பிரஜைகளும், பலவாறான ஜீவராசிகளும், அவர் அவர்களுக்குரிய சரீரங்களைப்பெற்றுப்பல கூட்டம் கூட்டங்களாக இந்த லோகத்தில் இருக்கின்றன.

6. மேற்கண்ட விதம் சுவர்க்கலோகத்திலும் இருக்கின்றது. ஆனால் ஒரு வித்தியாசம்—பூமியில் இருக்கின்ற மனிதர்கள், அவர்கள் ஸ்தூலசரீரம் நித்திரை செய்யும் காலத்தில், இந்த சுவர்க்கலோகத்திற்குப்போகிறவர்கள் மிக சொர்பம், அருமையானவர்கள். அதனால் அனேகர்களை இந்த லோகத்தில் பார்க்கமாட்டோம். பிதிர் லோகத்தை விட்டு விலகி இந்த லோகத்திற்கு வந்திருக்கின்ற மனிதர்களின் கூட்டங்களைக்காணலாம். பூமியில் திரும்பப் பிறக்கும்வரையில் இந்த லோகத்தில் இவர்கள் சந்தோஷமாகக் காலங்கடத்துகின்றார்கள்.

7. நாம் பூலோகத்தில் இருக்கும்போது, நம்முடைய ஸ்தூலசரீரம் பூலோகத்துடன் எப்படி சம்பந்திக்கின்றதோ, அப்படியே நம்முடைய நக்ஷத்திர சரீரங்களும் (astral bodies) மானசிக சரீரங்களும், (mental bodies) முறையே புவர்லோகத்துடனும், சுவர்க்கலோகத்துடனும், சம்பந்திக்

கின்றன. பூலோகத்தில் உள்ள ஜனங்கள் நம்மை ஸ்பரிசித்து நம்முடைய சரீரங்களில் ஒரு பதிப்பு, குறி அல்லது அடையாளத்தை, எவ்விதம் செய்கின்றார்களோ, அவ்விதமே மற்ற லோகங்களில் உள்ள ஜனங்கள் நம்மை ஸ்பரிசித்து நம்முடைய சரீரங்களில் ஒரு பதிப்பு, குறி, அல்லது அடையாளத்தைச்செய்தல்கூடும். விநோதமான சில மானசிக சம்பவங்களைப்பற்றி ஐரோப்பா கண்டத்திலுள்ள ஆத்மதத்துவ சாஸ்திரிகள் (Psychologists), ஹிந்துமத ஆத்ம தத்துவ சாஸ்திரத்தைப்படியாத தோஷத்தால், யாதொன்றும் தெரியாதவராய் சமாதானம்சொல்லமுடியாமல் மயங்குகின்றார்கள். மனிதனின் கோசங்களின் அமைப்பை அறிவதினால், இந்த மானசிகச்சரீரச்சம்பந்தப்பட்டச்சம்பவங்கள்தெளிவுபடும். பிரஞ்ஞா பூமியை எட்டாதவும் ஜாக்கிரதா, அவஸ்தைக்குள் வாராததும், வெள்ளை நரம்பின் மூலமாய் ஏற்படும், சில மானசிக அனுபவங்களையும் சம்பவங்களையும் பற்றிய குழப்பமான அபிப்பிராயங்கள் அப்படி அறிவதினால் நீங்கும். நேர்மையான அபிப்பிராயம் ஏற்படும். இந்த அனுபவங்களையும் சம்பவங்களையும்பற்றி ஆராய்ச்சி செய்வோம்.

8. சொப்பனங்கள்:—இவைகள் அடியில்வருமாறு பகுக்கப்படுகின்றன.

(a) ஜாக்கிரதா அவஸ்தையில் ஏற்படும் அனுபவங்களை திரும்பத்திரும்ப நினைப்பதால், ஸ்தூலமான அன்னமய கோசத்தின் கண்ணுள்ள மூளையில், சலனங்கள் அல்லது ஸ்வரங்கள் (Vibrations) உண்டாகின்றன. இச்சலனங்கள், சொப்பனத்திற்கு காரணமாகின்றன.

(b) அவ்வித அனுபவங்களால் பிராணமயகோசத்தின்கண் ஏற்படும் சலனங்களைக் காரணமாக உடைய சொப்பனங்கள்.

(c) புவர்லோக சம்பந்தத்தினால் ஏற்படும் சொப்பனங்கள்—இவை இரண்டுவகை.

(1) நமக்குச்சம்பந்தமில்லாதவர்களினாலும், நமக்குச்சம்பந்தமில்லாத சம்பவங்களினாலும், உண்டாகும் சொப்பனங்கள்.

(2) நமக்குச்சம்பந்தமுள்ளவர்களாலும், நாம் சம்பந்தப்படுவதாலும் நேரிடும் சம்பவங்களாலும், உண்டாகும் சொப்பனங்கள். புவர்லோக வாசிகள், (மனிதர்களாக இருப்பார்கள், ஏனைய ஜீவராசிகளாகவும் இருப்பார்கள்) நம்க்கு நேரில் தெரிவிக்கும் விஷயங்கள்.

(d) மானசிக லோகமான சுவர்க்கலோகத்தினால் உண்டாகின்றவைகள்—இத்தன்மையான சொப்பனங்கள் அதிக துர்லபமானவை. மானிசிகலோகத்தின் சம்பவங்கள்

அனுபவங்கள் நம்முடைய பிரகிருத மூளையைத்தாக்கிச் சலனிக்கும்படி செய்ய இயலா. மூளையின் திரவியம் ஸ்தூலமாக இருக்கின்றமையால்.

9. மேற்கண்ட பலவிதமான சொப்பனங்களைப்பற்றி அடியில் வருமாறு விளக்குவோம்:—

($a$) இவை அமுக்கியமானவை. கோவையில்லாதவும் சம்பந்தத்தொடர்பும் இல்லாதவும், ஒன்றுக்கொன்று விரோதமானவுமான பூர்வ அனுபவங்களில் சிறுசிறு துண்டுகளை ஒருவிதமாக பிணைத்து ஏற்படும் சொப்பனங்கள். சரீரத்திலுள்ள, சுவாசாசயம், ஹிருதயம், இறைப்பை, முதலிய கரணங்களுடன் சம்பந்தமாயுள்ள வெள்ளைநரம்பை அழுத்துகிறதினாலும், மூளையில் உள்ள ரத்தநாடித் தூவாரங்களில் அதிக ரத்தம் நிறைகிறதினாலும், அல்லது ரத்தம் குறைகிறதினாலும், அல்லது மூளையின் ரத்தம் அசுத்தமாக ஆகுகிறதினாலும், மூளையை அழுத்துகிறதினாலும், மூளையில் சலனங்கள் உண்டாகின்றன. ஷை சலனங்களால் யாதேனும் ஒன்று மூளையில் உள்ள சிறு அறைகளை (cells) ச்சலனிக்கும்படி செய்யக்கூடும். அதனால், முன்னனுபவங்களினால் ஏற்பட்ட சமஸ்கார ரூபமான வாசனைகள், உயிர்ப்பிக்கபடுகின்றன, அதனால் சொப்பனங்கள் எழுகின்றன.

(b) இச்சொப்பனங்களும் முன் பிரஸ்தாபித்தவை போன்றன. அதிக விசேஷமில்லை. ஆனால், கோவையானவைகளாகவும், உலகத்தில் நடித்தல் போலவும் காணும். ஏராளமான சொப்பனங்கள் வியக்தமாகவும் நாடகக்காட்சி போன்று விநோதமாகவும், இருக்கின்றன. இவை, வெளித்தூண்டுதலால் உண்டாகின்றன. உதாரணமாக—தூங்குகிறவன் முகத்தில் ஜலத்தைத்தெளிக்கின்றதினால், புசல் காற்று மழை பெய்வதாகச் சொப்பனம் காண்கிறான். ஒரு பிஸ்டலை (Pistol) தூங்குகிறவன் சமீபத்தில் சுடுகிறதினால், குஸ்தி செய்கிறதாகவும், சண்டைப்பிடிக்கிறதாகவும, கொலை செய்கிறதாகவும், சொப்பனம் காண்கிறான், கழுத்தில் சொற்பமாக அழுத்தினால், விசாரணை நடக்கிறதாகவும் அதன்மீது தூக்கில் போடுகிறதாகவும் சொப்பனம் காண்கிறான். (இவ்விதமானவைகளைப்பற்றி Dr. Prel's Philosophy of Mysticism என்னும் புஸ்தகத்தில் விஸ்தாரமாக பிரஸ்தாபித்திருக்கிறதைப் பார்க்கலாம்,) இவைகள் மிக வேடிக்கையானவை. மூளைசம்பந்தமான பிராணமய கோசமானது (etheric portion of the brain) போடகிராப் காமிரா (Photographic Camera) வின் கண்ணுள்ள, நிழற்படம் எடுக்க ஏற்பட்ட உணர்ச்சியுள்ள தகடுபோன்று (sensitive plate) படங்களைச்சித்திரித்து காட்டுகின்றது. ஆனால் அவ்விதமான கனவுகளால், ஜீவாத்

பாவான மனிதனுக்கு ஒருவித பிரயோஜனம் ஏற்படுகிற தில்லை; அவனுடைய பிராணமய கோசத்தின் நிலைமையைப் பற்றி ஒருவாறு விஷயம் தெரிந்துகொள்ளக்கூடும். இந்த சொப்பனங்கள் ஸ்தூல சரீரசம்பந்தமானவைகளாகையால் நினைவுகொள்ளும் காலத்தில் இவைகள் மறக்காமல் இருக் கின்றன. ஜீவாத்மாவான மனிதன் இவைகளுடன் சம் பந்திக்கிறுன் இல்லை. தூங்கும் காலத்தில், ஸ்தூல சரீரத் தை விட்டு வெகுதூரம் போய் விலகியிருக்கிறுன்.

---

## 13-ம் அதிகாரம்.

:o:

### ஹிந்துமதம்—சாஸ்திரத்திற்கும், யுக்திக்கும் ஒற்றுமையானது.

---

*(c)* இதில் இரண்டுபிரிவுகள் உண்டு. (1) ஸ்தூலசரீரம் நித்திரைகொள்ளவும், அசுத்த மானசிகசரீரமான நக்ஷத்திர சரீரம் (astral body) ஸ்தூல சரீரத்தை விட்டுப்பிரிகிறது; அந்நிலையில் ஜீவனையும் ஸ்தூல சரீரத்தையும் சம்பந்தப் படுத்தும் உத்திரவாதம் இல்லாமற்போகிறது. இந்த சமயத்தில், புவர்லோகச்சலனங்களை (விஷயங்களை) இப்

மானசிகசரீரம் கிரகிக்கின்றது, சிலசமயத்தில் தெளிவாக வும் சிலசமயத்தில் மங்கலாகவும் பிரஞ்ஞையை உண்டு பண்ணுகிறது. ஸ்தூல சரீரத்துடன் இருக்கிற ஒருவன், பாதையில் போகின்ற கூட்டத்தைப்பார்ப்பான், ஒரு குதிரை விழும், இரண்டு நாய்கள் சண்டைப்பிடிக்கும், ஒரு ஊர்கோலம் போகும் அல்லது, பிணம்போகும் இவை களை எல்லாம் பார்ப்பான். ஆனால் அவைகளில் தனக்கு யாதொரு சம்பந்தமும் இருக்கவில்லை. இம்மாதிரியாகவே, அசுத்த மானசிக்சரீரத்தை அவலம்பித்துக் கொண்டு புவர்லோகததில் நடைபெறுகிறவன், இவ்விதமான சம்பவங் களைப்பார்ப்பான், ஆனால் அவைகளுக்கும் அவனுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. ஸ்தூலசரீரத்திற்குததிரும்பி வந்த பிறகு, இச்சம்பவங்கள் நினைவுக்கும்வரும்; அப் போது, இன்ன இன்னமாதிரியாக சொப்பனம் கண்டேன் என்பான். ஆனால் அவைகள் இவனுடனாவது, இவன் விஷயங்களிலாவது யாதொரு சம்பந்தமும்படுகின்றன வில்லை. இன்ன இன்ன சொப்பனம் கண்டேனே, இதற்கு என்ன அர்த்தம், அதன் பயன் என்ன, என்று கேட்கிறான். அதற்கு சமாதானம் இதுதான். "அவ்விதமாக சம்ப வித்தது. அதை நீ பார்த்தாய் அவைகளால் உனக்கு ஒன்றும் இல்லை." இவ்விதமான சொப்பனம் கோவை யாகவும், பொருத்தமாகவும், முன்பின் விரோதமில்லா

மதும், தெளிவாகவும், மனதுக்கு ரம்மியமாகவுமிருக்கும். ஆனால் அதைப்பார்த்தவனுக்கு யாதொரு பிரயோஜனமுமில்லை.

(2) இந்தவித சொப்பன அனுபவத்தின் விஷயம் வேறு. இதில் சொப்பனம் கொள்ளுகிறவன், அந்த சம்பவத்தில் தானும் சம்பந்திக்கிறான். அந்த புவர்லோகவாசிகளுடன் இவனும் கலக்கிறான்; அவர்கள் இவனுடன் பேசுகிறார்கள், சமாசாரத்தைச்சொல்லுகிறார்கள், உபதேசம் பண்ணுகிறார்கள், எச்சரிக்கைகளைத் தெரிவிக்கிறார்கள், வேறு, இவனுக்கு அனுகூலமான விஷயங்களையும், இம்மாதிரி நடத்து என்றும், இம்மாதிரி நடத்தாதே என்றும், புத்திமதிக்கற்பிக்கிறார்கள். இனிவரப்போகிற விஷயங்களைத்தெரிந்துகொள்ளுவான், அல்லது சென்ற விஷயங்கள் மேலான பூமிகளினின்று, புவர்லோகத்திரவியத்தில் சித்திரங்கள்போல பிரிதிபிம்பிக்கப்பட்டு, அவைகளை இவன் பார்ப்பான், நித்திரைக்குப்பிறகு விழித்தமேல், இவைகளைப் பற்றி ஞாபகம் வந்தால், மற்ற உலகத்தில் நேர்ந்த சம்பவங்களின் ஞாபகங்களைச்சொப்பனங்களாக இவன் கிரகிக்கிறான்.

(*d*) புவர்லோக சம்பந்தமாக உண்டாகும் சொப்பனங்களின் தர்மமே, மானசீகலோகமான சுவர்க்கலோகச்

சம்பந்தமான சொப்பனங்களுக்கும் பொருந்தும். ஆனால் சுவர்க்கலோகச்சம்பந்தமான அனுபவங்களை ஸ்தூலப் பிரஞ்ஞா பூமிக்கு அதாவது நமது ஜாக்கிரதை அவஸ்தைக்கு கொண்டுவருதல், மிகத்துர்லபம். அவைகள் சூக்ஷ்மமான திரவியங்களுள்ள பூமியில் நடக்கின்றமையால், ஸ்தூல பிரகிருதி சம்பந்தமான பிரஞ்ஞா பூமியின் ஸ்மரணையின் வரம்புக்குட்படா.

2. அசுத்தமனசான, மானசிககோசமும், சுத்தமனசான விஞ்ஞானமய கோசமும், நம்மிடத்தில் பிரியாமல் எப்போதும் இருக்கின்றன. அவைகள் சம்பந்தப்படும் பிரஞ்ஞா பூமிகளில் உள்ள வஸ்துகளாலும், வசிக்கின்றவர்களாலும், உண்டாக்கப்படும் சலனங்கள் அல்லது சேஷ்டைகள், நம்முடைய மனத்தில், பலவிதமான எண்ணங்களாகவும், முன் எச்சரிக்கைகளாகவும், பயங்கரமான பாவங்களாகவும், வெறுப்புக்களாகவும், விருப்பங்களாகவும், பிரிதிபலிக்கின்றன. ஆனால் அவைகள் ஸ்தூல சரீரம் சம்பந்தமில்லாமல் நிகழ்கின்றமையால், அவைகளை இன்னவையென்றும், அவைகளின் காரண காரிய சம்பந்தமும், நம்மறிவுக்குப்புலப்படுகிறதில்லை. ஹிந்துமதத்தினால் உபதேசிக்கப்பெறும், சூக்ஷ்ம சரீரங்களையும், அவைகள் சம்பந்தமாகவுள்ள சூக்ஷ்ம பூமிகளையும், மேல்நாட்டு சாஸ்

திரஞ்ஞர்கள் தெரிந்துகொண்டால், நம்முடைய பிரஞ்ஞா பூமிக்குவராத விஷயங்களுக்கு (problems of the 'Unconscious'); லகுவாயும் யுக்திக்குப்பொருத்தமாயுமுள்ள சமாதானங்களைத்தெரிந்து கொள்ளுவார்கள். இப்போது அவைகளைப்பற்றி ஐரோப்பிய சாஸ்திரஞ்ஞர்கள் குழம்பி மயங்குகிறார்கள்.

3. மதசம்பந்தமான அனுபவங்கள் :—ஒவ்வொரு மதத்திலும், சிரத்தையும் தீவிர பக்தியுமுள்ளவர்கள் சாதாரணமான திருஷ்டிக்குத்தோன்றாத தெரிசனங்களைப் பெறுகிறார்கள்; தமக்குத்தெரியாமல் சாந்தத்தையும் சந்தோஷத்தையும் அடைகிறார்கள்; தங்களுடைய சாதாரணப்பிரஞ்ஞைக்கு மேற்பட்டவிஷயங்களை அறிகிறார்கள்; ஞானவிஷயங்களில் அநேக ரகசியங்களையும் உண்மைகளையும் கிரகிக்கிறார்கள். இத்தன்மையான அனுபவங்கள் சூக்ஷ்மமான சரீரங்களின் யாதேனும் ஒன்றை அவலம்பித்துக்கொண்டு ஏற்படுகின்றன. ஸ்தூல சரீரமும், அசுத்த மானஸிகசரீரமும் யாதொரு தொழிலுமில்லாமல் நித்திரையான நிலைமையில் இருக்குமாகில், ஜீவன் விஞ்ஞான மயகோசத்துடன் சம்பந்தத்தை வைத்துக்கொண்டுச்சுவர்க்கலோக விஷயங்களை அறிவான். சுவர்க்கத்திலே பிரஞ்ஞையுடன் நடைபெறுவான். தேவர்களுடன் பேசுவான்;

தேவலோகக்கநத்தை அனுபவிப்பான். இதற்குமேலான பிரஞ்ஞா பூமிக்கும் போதல் கூடும்; பக்தன் மெய்மறந்து அன்பினல் பரவசமாகியிருக்கின்ற நிலையிலும், யோகிதியான சமாதி நிலையிலும், இத்தன்மையான உயர்ந்த அனுபவங்கள் உண்டாகும். ஹிந்துமதத்தில் சொல்லுகிறபடி மனிதனின் சரீரங்களின் அமைப்பைத் தெரிந்தால், இத்தகைய விஷயங்கள் அறிவுக்கு ஒற்றுமையாகவே ஏற்படும்.

4. வரப்பிரசாதம் பெற்ற விவேகி (Genius) யைப் பற்றி இனி விசாரிப்போம். இத்தன்மையானவனுடைய காரண சரீரம் விகாசமாகி, மலர்ந்து, அது சம்பந்தமான பிரஞ்ஞா பூமியில் இவன் வேலை செய்கிறவன். அந்தக் காரண சரீரத்தில் நிகழும் சலனங்கள் அதிக தீவிரமாக ஏற்பட்டு அதைவிட தாழ்ந்த சரீரங்களை தாக்குகின்றன. தர்க்கத்தினலும், விஞ்ஞானப்பயிர்ச்சியாலும், ஆராய்ச்சினலும், இவனுடைய சிந்தனைகள், பாவங்கள், அபிப்பிராயங்கள், உண்டாகின்றன அல்ல; பளிச்சுப்பளிச்சு என்று பிரயத்தினமின்றி, அவனுக்கு தோன்றுகின்றன. அவன் பிரஞ்ஞை முழுவதும் இந்தசக்தியால் பிரகாசிக்கின்றது. சூரியன் போன்று, எவ்வித சந்தேகமும் கல்மஷமும் இன்றி, அவன் புத்தியானது ஞானஒளியை எங்கும் பரவச்

செய்கின்றது. சாதாரண ஜனங்கள்கூட சில சில சமயங்களில், இத்தகைய யோக்கியதையையும் ஞான ஒளியையும் பெறுகிறார்கள். தாங்கள் முன் அறியாத ஞானம் தங்களுக்கு உண்டாகிறதாகத்தாங்கள் தெரிந்துகொள்ளுகிறார்கள். இச்சமயங்களில் தன்னைத் தான் அறிகிறான். தான் என்ற ஜோதியினின்று ஒரு பொறி பளிச்சு என்று வீசுகிறது. மற்ற சமயங்களில் ஸ்தூலமான பிரகிருதி திரவியம் தன்னை மறைக்கிறது, தன்சக்தியை குன்றும்படி செய்விக்கிறது.

5. தூர இருக்கின்றவர்களுடன் யாதொரு கருவி சம்பந்தமில்லாமல் சம்பாஷணை செய்தல் முதலியன (Telepathy)—இப்போது தந்திக்கம்பிகள் இல்லாமல் எவ்விதம் தந்திச்சமாசாரங்கள்நடத்தப்படுகின்றனவோ (Wireless telegraphy), அவ்விதமே, சூக்ஷ்மமான சரீரங்களின் சலநங்களும் ஸ்வரங்களும் (Vibrations) அலைகளாகப் பரிணமித்துப்பரவுகின்றன; அவைகள் சூக்ஷ்மமான சரீரங்களுடன் சம்பந்திக்கின்றன; தாக்குகின்றன. அந்தக்காலங்களில், அதேமாதிரியான பிரதிச்சலநங்களை உண்டாக்குகின்றன. மானிசீக விஞ்ஞான பூமியின் திரவியங்களில் இச்சலனங்களால் உண்டாகிற அலைகள் மூலமாய் தூரதேசத்து சமாசாரங்கள் தெரியவரும். சமாசாரங்களையும் தூரதேசத்துக்கும் அனுப்பலாம்.

6. மனிதன் தன்னுடைய பலவிதமான சரீரங்களி னல் பல லோகங்களுடன் சம்பந்தமுள்ளவனுக இருக்கி ருன் என்றும், அவைகள் இவனே பாதிக்கின்றன என்றும், அவைகளே இவன் பாதிக்கிருன் என்றும், நாம் தெரிந்து கொள்ளுவோமாகில், இப்போது அவன் மனத்தில் உண்டா கும் குழப்பமான சந்தேகங்களேத்தெளிவுப்படுத்திக்கொள் ளலாம். நம்முடையப்பிரஞ்ஞா பூமி, விகாசமுறையில், விரிய விரியவும், அதற்கு ஏற்ப நம்முடைய சூக்ஷ்மசரீரங்கள் மேன்மேலும் விகாசமுறையில், அபிவிருத்தியடையவும், இந்த விஷயங்களின் உண்மைத்தெளிவாய் புலப்படும். இப்போது இவ்வித பாவங்களேப்பற்றிய பயங்கரம், திகை ப்பு, அற்புதம் என்ற நினைப்பு, முதலியவை போய்விடும். இயற்கையான சம்பவமாகவும் பிரியமுள்ளவையாகவும் நேர்மையுள்ளவையாகவும் இவைகள் தோன்றுவனவாகும். ஹிந்துமதத்தின் உபதேசத்தினுல், பிரஞ்ஞா பூமிக்குவராத சிக்கலான விஷேபங்களே (the labyrinth of the unconscious) அறிந்துகொள்ள உதவிஏற்படுகிறது.

7. ஹிந்துவாலிபன் தான் அதிர்ஷ்டவசத்தினுல் பிறந்திருக்கிற ஹிந்துமதத்தின் மஹிமையை வரவரத் தெரிந்துகொண்டால், இன்னும் அதின் கண்ணுள்ள தத்து வங்கள் உண்மையானவை எனச்சித்தாந்தப்படுத்தப்படும் என்று, அறிவான். பொறுமையுடன் எதிர்பார்ப்பான்.

தற்காலத்திய நீடித்தவும் பொறுமையுடனும் நடத்தப் பெறும் சாஸ்திரப்பரிக்ஷையினுல், எவ்வளவோ நீடித்தகால சுவானுபவத்தினுலும் பரிக்ஷயினுலும் மஹரிஷிகள் கண்டுபிடித்த உண்மைகளை அறியும்படியாக ஏற்படுகிறது. உலகத்தின் கண்ணுள்ள மதங்களுக்குள் எல்லாம் அதிகச் சிரேயஸ்கரமானதும், சாஸ்திரத்துக்கும் யுக்திக்கும் பொருத்தமாய் உள்ளதுமான இந்த ஹிந்துமதத்தின் பேருதவியால், மதத்திற்கும் சாஸ்திரத்துக்கும் (Religion & Science) நிகழ்ந்துகொண்டிருக்கும் நீடித்த போராட்டம் முடிவு பெறும். இரண்டும் இணைபிறியாதச்சினேகிதர்களாக ஆவார்கள், பாணிக்கிரகணம் செய்வார்கள், அன்னியோந்நியம் பாராட்டுவார்கள்.

---

## 14-ம் அதிகாரம்.

———:o:———

### விகாசமுறை அல்லது பரிணமவாதம்.

---

### (Evolution.)

விகாசமுறை என்ற சித்தாந்தமானது மனிதன் முன் கொண்டிருந்த அபிப்பிராயங்களை பேதித்து, புரட்டி; முற்றும் மாற்றிவைத்திருக்கிறது. வேறு ஒரு சித்தாந்த

மும் இவ்விதம் செய்திருப்பதில்லை. இந்த சித்தாந்தத்தின் உள்விவரணங்களைப்பற்றியும், அது நடை பெறுகிற விதங்களைப்பற்றியும், பலவித பேதமான அபிப்பிராயங்கள் வித்துவான்களுக்குள் இருக்கின்றன. ஜீவராசிகள் மேன் மேலும் விருத்தியடைந்து, விகாசமாகி, நானாவிதமான ரூபங்களாகப்பரிணமித்துவருகின்றன என்பதான தர்மத்தைப் பற்றி, வித்தியாசமான அபிப்பிராயமில்லை. புத்திமான்கள் எல்லோருமிதை அங்கீகரித்துள்ளார்.

2. அனேகர்கொள்கையில், இந்த விகாசமுறைச்சித்தாந்தம் ஒன்றுதான் நம்மைச்சுற்றியுள்ள ஸ்தாவரஜங்கமங்களின் நிலைமையைத்தெளிவாய் எடுத்துக்காட்டி, அந்தந்நிலைமை ஏற்படுதலுக்குத்தக்க காரணத்தை விளக்குகிறது. இந்த சித்தாந்தம் 19-ம் நூற்றுண்டின் பிரஞ்ஞானபிவிருத்தியின், கம்பீரமான மகுடம்போன்று, பிரகாசிக்கின்றது. முன் இந்த சித்தாந்தம் ஜனங்களுக்கு தெரியாது என்றபடி. இவ்வபிப்பிராயம் மேல்நாட்டின் கிறீஸ்துவர்களின் விஞ்ஞானப்பயிர்ச்சிச்சம்பந்தப்பட்டமட்டில் உண்மைதான். மகமதியர்களின் தத்துவஞானிகளால் இந்தச்சித்தாந்தம் உபயோகிக்கப்பட்டுள்ளது. விகாசமுறை—அதாவது, ஆத்மா, பிராணன், உயிர் இதின்கண்ணுள்ளடங்கிய சக்திகள், சிறுகச்சிறுக வெளிப்பட்டு பரிணமித்து, மலர்ந்து

விகாசம்பெறுதலென்ற உபதேசமானது, பிராசீன ஹிந்து மதசாஸ்திரங்களில் தெளிவாயும் வியக்தமாயும் பிரஸ்தாபித்துள்ளது. அயித்திரேய பிராஹ்மணத்தின் இரண்டாவது ஆரண்ணியகம் 3-ம் கண்டத்தில் கண்டிருக்கிற அடியில்வரும் விவரம் இதற்கு தக்க சாக்ஷியமாகும்.

(1) (உக்த என்று சிந்திக்கப்படும் மனிதனின் கண் உள்ள) ஆத்மாவின், சிறுகச்சிறு வேளைவந்து மலரும், தன்மையை அறிகிறவன் தன்னிடத்தில் அதிகமான அபிவிருத்தியை அடைவான்.

(2) செடிகள், மரங்கள், பலஜீவராசிகள் இருக்கின்றன. ஆத்மா அவைகளில் இருந்துகொண்டு மேன்மேலும் விருத்தியடைகிறான். செடிகளிலும், மரங்களிலும், ரசம் மாத்திரம் காணப்படும். பிராணிகளில், சித்தம் என்பதும் காணப்படும்.

(3) பிராணிகளிலும், ஜீவன் மென்மேலும் விகாசம் பெற்று வருகிறான். சிலவைகளில், ரசமும் (ரத்தம்) சித்தமும் காணப்படுகின்றன. மற்றவைகளில் சித்தம் தோன்றாமல் குப்தமாக இருக்கின்றது.

(4) மனிதனிடத்திலும் ஜீவன் மேன்மேலும் விகாசம்பெறுகிறான். மனிதன் பிரஞ்ஞையை அதிகமாகஉடையவன்; முன் அறிந்ததை சொல்லுகிறான், முன் அறிந்

ததைப்பார்க்கிருன். நாளை நடக்கப்போகும் விஷயத்தை அறிகிருன். சுவர்க்கம், நரகம் இரண்டையும் அறிகிருன். மரணதர்மத்திற் குறியவையினின்று நீங்கி, அமிருதத்தை அடைய விரும்புகிருன். இவ்விதமாக பிரஞ்ஞாசம்பந்நனாக ஆகிருன்.

(5) மற்றப்பிராணிகள் விஷயத்தில் பசி, தாகம், மாத்திரம் மனத்தின்பீஜமாக இருக்கிறது. முன் அறிந்ததைப் பற்றி அவைகள் விசாரிக்கிறதில்லை. முன் அறிந்ததை அவைகள் பார்க்கிறதில்லை. நாளை நடக்கும் விஷயத்தை அவைகள் அறியா. சுவர்க்கம், நரகம் இவையிரண்டும் அவைகளுக்குத்தெரியா. அவைகளின் அறிவின் வரம்பு அவ்வளவுதான்; அதற்கு அதிகமாகச்செல்ல இயலாது. அவைகளின் பிறப்பும், அவைகளின் அறிவின் அளவாகவேயிருக்கிறது. "இதன்மேல், வித்தியாரண்ணிய சுவாமிகள் என்ற சயநாசாரியார் அவர்கள் அடியில்வருமாறு வியாக்கியானம் செய்திருக்கிருர். "அசேதநமான, மண், கல் முதலியவைகளின் ஆத்மா, சத்தாக (இருத்தல்) மாத்திரம் இருக்கிருன். ஜீவரூபத்தை இன்னும் அடைகிருனில்லை. ஸ்தாவரங்களான, பூண்டுகள், மரங்களும், உச்சுவாஸ நிச்சுவாஸமுள்ள பிராணிகளான ஜங்கமங்களும் ஆத்மாவிற்கு உயர்ந்த உறைவிடங்களாகவாகும்.

3. இந்தஇடத்தில் ஸ்தாவரம், கீழானஜங்கமம், மேலான ஜங்கமம், மனிதன் என்ற வரிசை, படிப்படியாய் வியக்தமாய் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் விகாசத்திற்குக்காரணம் ஆத்மாவின்கண்ணுள்ள சக்திகள் என்றும், அவைகள் மலருகின்றன அதாவது அபிவிருத்தி அடைகின்றனவென்றும், சொல்லியிருக்கின்றது. மேல்நாட்டில் நடைபெறும் விகாசமுறையென்ற சித்தாந்தம், மேற்கண்ட உண்மையை சேர்த்துக்கொள்ளாவிட்டால், குறைவாகத்தான் இருப்பதாகும்; யுக்திக்கும் பொருத்தமாக இராது.

ஓம், தத், சத்.

---

ஓம்.

ஸத்யம் ஒன்றே ஜயிக்கும் அஸத்யமன்று.

# ஆரிய சமய நீதிமுறை.

1. கடவுள் ஒருவர் உளர் என்றுஅறி.
2. அவர் யாவற்றையும் சிருஷ்டித்தார்.
3. அவர் எங்குமுளர். யாவையும் அறிந்தவர். எல்லாவல்லமையும் பொருந்தியவர்.
4. அவர் நம்பெற்றோறினும் அதிகமான அன்புடன்ந ஆதரிக்கிறவர். அதனால் அவர் யாவருக்கும் வாவார்.
5. நாம் சுகிர்தமடையும் பொருட்டே உடல் பெ ஆவி மூன்றையும் நமக்களித்திருக்கிறார்.
6. அவரை நம்பு. அவரை வழிபடு.
7. சூரிய உதயமுன் படுக்கையை விட்டெழு.
8. பசியின்றி உண்ணாதே. பசித்துப்பட்டினியிராதே
9. நீ இருக்குமிடத்தில் எல்லாவற்றையும் ஒழுங்காயும நேர்மையாயும் பரிசுத்தமாயும் வைத்துக்
10. செய்யும்கர்மத்தில் முறையுள்ள விடாமுயற்சியாயிரு அது பலனைத் தவறாமல் அளிக்கும்.
11. பிரசித்தமான தீயருடன் உறவாடாதே.

12. எந்த ஜீவனுக்கும் தீங்கு செய்யாதே.

13. பெற்றோர், மூத்தோர், குருக்கள், அறிஞர்கள், தேவர்கள் இவர்களைப் போற்றிவாழ்.

14. எல்லாரிடமும், பிரீதியுள்ளவனாயிரு.

15. பிறர் பொருளை விரும்பாதே.

16. வீண் செருக்கு அடையாதே.

17. நித்திய கர்மங்களைச்செய்.

18. எளியருக்கும் வருந்தினவருக்கும் உதவிசெய்.

19. நீ கற்கவேண்டியவைகளை, நன்றாய்க்கற்றுக்கொள்.

20. பெருந்தன்மையாயிரு. ஆனால் வீணபெருமைகொள்ளாதே.

21. எப்போதும் மெய் பேசு. பொய்யைத் தவிர்.

22. எல்லாரிடமும் அன்பு செய்யாவிடினும் எவருக்கும் தீமை நினையாதே.

23. உன்னினத்தாரிடம் அன்பு பாராட்டு.

24. [illegible]ளை அகற்று.

25. [illegible]சினம் உண்டாக இடம் கொடாதே.

26. உள்ளும் புறமும் தூய்மையாயிரு.

27. எப்போதும் இறைவனை நம்பு. அவர் வழிவிடுவார்.

ஓம்.

சுபமஸ்து.

ஸத்யம் ஒன்றே ஜயிக்கும் அஸத்யமன்று.

———:o:———

# உயர் நலமமைந்த தர்மமுறைகள்.

1. சுத்தமான வாழ்வும்.
2. கபடமற்ற மனமும்.
3. தூய்மையாம் நெஞ்சும்.
4. அறியவிரும்பும் இயல்பும்.
5. யாவருடனும் சகோதர நேசமும்.
6. நீதிமுறை கற்பித்தலினும், பெறுதலினும் அவாவும்.
7. உள்ளத்தில் மறைவில்லா ஞான எழுச்சியும்.
8. தீவிர குருபக்தியும்.
9. எவ்விதக் கொடுமை நேரினும் ஈசன் செயலெனக் கொள்ளும் தெளிவும் பொறுமையும்.
10. உண்மைகளைத் தைரியமாய் உரைத்திடும் திறனும்.
11. அநியாயமாய் துன்பப்படுத்தப்படுபவருக்கும், நிந்திக்கப்படுபவருக்கும், தைரியமாய் உதவி புரிதலும் ஆதரவு செய்தலும்.